உ

சிவமயம்.

திருக்குற்றாலக்குறவஞ்சி.

இஃது.

திருவெண்காடு.

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

—*—*—

திருவொற்றியூர்

தி-பரசுராமமுதலியார்

குமாரர்

—)○*○(—

தி-ப-கன்னியப்பமுதலியார்

அண்டு பிரதர் அவர்களது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

—()—

௧௮௯௩ (வரு)

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106

உ

கடவுள் துணை.

புத்தகவிளம்பரம்.

——)♊(——

இதனால் சகலமானபேர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் சென்னையைச்சார்ந்த சூளை இருங்குன்றம் இலட்சுமி நாராயண புரத்தில் கொட்டிக்கலே குமரப்பமுதலியார் வீதியில் ௩௯-வது, கதவிலக்கமுள்ள கிரகத்தில் ஸ்தாபித்திராநின்ற பரப்பிரமமுத்திராக்ஷரசாலையில் இதுவரையில் கண்டிருக்கப்பட்ட புத்தகங்களல்லாமல், கற்றுணர்ந்த பெரியோர்களால் பிழையறப்பரிசோதித்து அச்சிடப்பட்டமிகமேலான உபயோகமுள்ள பலவிதவேதாந்தசித்தாந்த கிரந்தங்களும், வயித்திய கிரந்தங்களும், ஜோசிய கிரந்தங்களும், மகம்மதமார்க்கக்கிரந்தங்களும் இன்னும் அனேகவிதமான தமிழ்ப்புத்தகங்களும், விலைசரசமாய் விற்கப்படுமாகையால் வேண்டியவர்கள் மேற்படி அச்சுக்கூடத்தில் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீமகாபாரதக்கீர்த்தனைகாவிகோ பவுண்டுடன்கிரயரூபாய்-௩.௰	தக்ஷிணாமூர்த்திதிருமந்திரம் ௩ருா
	தன்வந்திரிகலைச்ஞானம் ருா
ஸ்ரீமகாபாரதவசனகாவியம் ௰௮-பர்வம்	சிமிட்டுரத்தினச்சுருக்கம் ௩கூய
	அகஸ்தியர்ஆயுள்வேதம் ௩உா
ஸ்ரீமத்கம்பராமாயணவசனம்	மேற்படியார்பாலவாகடம் ௩ா
பிரமோத்தரகாண்டமூலமும் உரையும்	தன்வந்திரிவைத்திய சிந்தாமணி ௩உா
ஸ்ரீவிஷ்ணுபுராணவசனம்	அகஸ்தியர் காவியம் ௰உ௩
பதார்த்தகுணவயித்திய அரும் பொருளகராதி	போகர் சத்தகாண்டம் எ௩
	சிகிச்சாசாரசங்கிரகம்
பதார்த்தகுணசிந்தாமணி	ஜினேந்திரமாலை
சதுரகராதிபெரியயெழுத்தில் அச்சிட்டது	சிதம்பரபுராணம்
	அராபிக்கதை-௩-வாலம்
ஸ்ரீமகாபாகவதம் (௰௮) லெத்த கிராப்படத்துடன்	நளவீமபாகசாஸ்திரம்
	டம்பாச்சாரிவிலாசம்
ஆத்மரட்சாமிர்தமென்னும் வயித்தியசாரசங்கிரகம்	கசசுல்லன்பியா
	சீறுபுராணம்
அகஸ்தியர்வமதத்துவ மென்னும்பஞ்சகாவிய நிகண்டு அா	ஐந்துபடைப்போர்
	அப்பாசுநாடகம்
	பலவித்துவான்கள்பதம்

ஸ்டாம்பு அனுப்பினாலல்லது பதில்கடிதம் அனுப்பப்படமாட்டாது.

உ

திருச்சிற்றம்பலம்.

திருக்குற்றாலக்குறவஞ்சி.

விநாயகர்துதி.

ஆசிரியவிருத்தம்.

பூமலியிதழிமாலை புனைந்தகுற்றாலத்தீசர்
கோமளர்ப்பாதம்போற்றிக் குறவஞ்சித்தமிழைப்பாட
மாமதத்தருவிபாயு மலையெனவளர்ந்தமேனிக்
காமலிதருப்போலைந்து கைவலான்காவலாமே.

சுப்பிரமணியக்கடவுள்துதி.

ஆசிரியவிருத்தம்.

பன்னிருகைவேல்வாங்கப்பதினொருவர்படைதாங்கப்பத்துத்திக்கும்
நன்னவவீரரும்புகழமலைகளெட்டுங்கடலேழுநாடியாடப் [ருய்
பொன்னின்முடிபாரேந்தியஞ்சுதலையெனக்கொழித்துப்புயநான்மூன்
தன்னிருதாடருமொருவன்குற்றாலக்குறவஞ்சித்தமிழ்தந்தானே.

திரிகூடநாதர்துதி-ஆசிரியவிருத்தம்.

கிளைகளாய்க்கிளைத்தபலாக்கொம்பெலாஞ்சதுர்வேதக்கிளைகளீன்ற
கலையெலாஞ்சிவலிங்கங்கனியெலாஞ்சிவலிங்கங்கனிகளீன்ற
களையெலாஞ்சிவலிங்கம்வித்தெலாஞ்சிவலிங்கச்சொரூபமாக[வோமே
விளையுமொருகுறும்பலவின்முளைத்தெழுந்தசிவக்கொழுந்தைவேண்டு

குழல்வாய்மொழியம்மைதுதி-ஆசிரியவிருத்தம்.

தவளமதிதவழ்குடுமிப்பனிவரையின்முளைத்தெழுந்துதழைசேர்முக்க
பவளமலைதனிலாசைபடர்ந்தேறிக்கொழுந்துவிட்டுப்பருவமாகி [ட்
யவிழ்நறைப்பூங்கடப்பந்தாமரையுமீன்றொருகோட்டாம்பலீன்று
குவலயப்பூத்தருள் கொடியைக்கோதை குழல்வாய்மொழியைக்கூறு

மூவர்துதி-ஆசிரியவிருத்தம். [வோமே.

தலையிலேயாறிருக்கமாமிக்காகத்தாங்குகடலேழமைத்த திருக்கு
ற்றாலர், சிலையிலேதடித்ததடம்புயத்தைவாழ்த்திச்செழித்தகுறவஞ்
சிநாடகத்தைப்பாட, வலையிலேமலைமிதக்கவேறினனு மத்தியிலேபூ
வையங்காளழைப்பித்தானுங், கலையிலேகிடைத்தபொருளாற்றிற்போ
ட்டுக்கணகுவத்திலெடுத்தானுங்காப்பதாமே.

அகத்தியர்வாதவூரர்துதி- ஆசிரியவிருத்தம்.

சித்தர்திரிகூடலிங்கர்குறவஞ்சிநாடகத்தைநிகழ்த்தவேண்டி
முத்தர்திருமேனியெல்லாமுருகவேதமிழுரைத்தமுனியைப்பாடி
இத்தரையிலாத்துமம்விட்டிறக்குநாட்சிலேட்டுமவந்தெறுவண்ணம்
பித்தனடிதுணைசேர்ந்தவாதவூரனடியாள்பெறுவோமே.

குற்றாலக்குறவஞ்சி.

சரஸ்வதிதுதி—ஆசிரியவிருத்தம்.

அடியிணைமலருஞ்செவ்வாயாம்பலுஞ்சிவப்பினாளை
கெடியபூங்குழலுமைச்சனிலமுற்கறுப்பினாளைப்
படிவமும்புகழுஞ்செங்கைப்படிகம்போல்வெளுப்பினாளைக்
கொடிதனைத்திருக்குற்றாலக்குறவஞ்சிக்கியம்புவோமே.

நூற்பயன்—ஆசிரிய விருத்தம்.

சிலைபெரியவேடனுக்குநரிக்கும்வேதச்செல்வருக்குந்தேவருக்கு மிரங்கிமேனாட், கொலைகளவுசட்காமங்குறுத்துரோகங்கொடியபஞ்ச பாதகமுந்தீர்த்ததாலே, நிலவணிவார்குற்றாலநினைத்தபேர்கணினைத்த வரம்பெறுவாதுநினைக்கவேண்டிப், பலவளஞ்சேர்குறவஞ்சி நாடகத் தைப்படிப்பவர்க்குங்கேட்பவர்க்கும்பலனுண்டாமே.

அவையடக்கம்—ஆசிரிய விருத்தம்.

தாரிணைவிருப்பமாகத்தலைதனில்முடிக்குந்தோறும்
நாரினைப்பொல்லாதென்றேஞாலத்தோர்தள்ளுவாரோ
சீரியதமிழ்மாலைக்குட்செல்வர்குற்றாலநாதர்
பேரினாலெனதுசொல்லைப்பெரியவர்தள்ளார்தாமே.

கட்டியக்காரன்வருகிற—விருத்தம்.

தேர்கொண்டவசந்தவீதிச்செல்வர்குற்றாலத்தீசர்
பார்கொண்டவிடையிலேறும்பவனியெச்சரிக்கைகூற
நேர்கொண்டபுரிநான்மார்புநெடியகைப்பிரம்புமாகக்
கார்கொண்டமுகிலேறென்னக்கட்டியக்காரன்வந்தான்.

இ—ம்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

௧. பூமேவுமநுவேந்தர்முதலோரைப்
புரந்திடுஞ்செங்கோலானபிரம்புடையான்
௨. மாமேருச்சிலையாளர்வரதர்குற்றாலநாதர்
வாசற்கட்டியக்காரன்வந்தனனே.

கட்டியக்காரன்சொல்லுகிற-விருத்தம்.

முக்கெழுந்தமுத்துடையாரணிவருக்கைநன்னகரமூதூர்வீதி
வாக்கெழுந்தகுறுமுனிக்காய்மறியெழுந்தகாங்காட்டும் வள்ளலாசீர்த்
தேக்கெழுந்தமறைநான்குஞ்சிலம்பெழுந்தபாதர்விடைச்சிலம்பிலேறி
மேக்கெழுந்தமதிக்குடிக்கிழக்கெழுந்தஞாயிறுபோல்மேவினாரோ.

திரிகூடநாதர்பவனிவருதல்

தரு-இ—ம்—பந்துவராளி—தாளம்—சாப்பு.

பல்லவி.

பவனிவந்தனரே-மழுவிடை— பவனிவந்தனரே.

அநுபல்லவி.

அவனிபோற்றியகுறும்பலாவுறைமவுனநாயகரொவனநாயகர்
சிவனுமாபரியனுமானவர்கனமால்விடையதனிலே (பவனி)

சரணங்கள்.

க. அண்டர்கூட்டமுமுனிவர்கூட்டமுமசுரர்கூட்டமுமனிதராகிய
தொண்டர்கூட்டமுமிமையிலாரெனச் சூழ்ந்துதனித்தனிமயங்கவே
பண்டைநாரிவர்தேவரிவரெனப்பகுத்து நிறுவியவேளை தொறுந்
தொறும், மண்டலீகரைநந்திபிரம்படிமகுடகோடியிற்புடைக்கவே—

உ. தடுப்பதொருகரங்கொடுப்பதொருகரந்தரித்தசுடர்மழுவிரித்ததொ
ருகரம், எடுத்தசிறுமறிபிடித்ததொருகரமிலங்கப்பணியணி துலங்க
வே, அடுத்தவொருபுலிகொடுத்தசோமனுமாணைகொடுத்த விதான
ச்சேலையும், உடுத்ததிருமருங்கசையமாலயன்றெடுத்தபரிகரிமிசை
யவே. (பவனி)

௩. தொடருமொருபெருச்சாளியேறியதோன்றல்செயப்படைத்தாங்க
வே, யாடல்துலாவியதோகைவாகனத்தரசுவேல்வலம்வாங்கவே
படலமார்பினிற்கொன்றைமாலிகைபதக்கமணியொளிதேங்கவே
புடையநாயகன்வாவுகண்டுகண்டுலகெலாந்தழைத்தோங்கவே(பவ)

௪. இடியின்முழக்கொடுபடருமுகிலெனயானைமேற்கணபேரிமுழக்கமு
ந்துடியின்முழக்கமும்பரந்துதிசைக்கரிதுதிக்கையாற்செவிபுதைக்க
வே, அடியர்முழக்கியதிருப்பல்லாண்டிசையடைத்தசெவிகளுந்திற
க்கமூவர்கள், வடிசெய்தமிழ்திருமுறைகளொருபுறமறைகளொரு
புறம்விளங்கவே. (பவனி)

௫. கனகதப்புருகின்னரங்கழவாசவீணைமிழற்றவே
யனகர்திருமுத்தின்சிவிகைகவிகைபொன்னாலவட்டநிழற்றவே
வனிதைமார்பலகுஞ்சஞ்சாமரைவரிசைவிசிறிசுழற்றவே
தனதனிந்திரன்வருணன்முதலியசகலதேவரும்வழுத்தவே. (பவ)

௬. சைவர்மேவிடச்சமணர்சிழிடச்சாலசயமுமேற்கவே
கைவலாழியங்கருணைமாலொடுகமலத்தோன்புடைகாக்கவே
ஐவரநாயகன்வந்தனன்பலவமரர்நாயகன்வந்தனன்
தெய்வநாயகன்வந்தனனெனச்சின்னமெடுத்தெடுத்தார்க்கவே(பவ

௭. சேனைப்பெருக்கமுந்தானைப்பெருக்கமுந்தேன் பெருக்கமுந்தாரின்
பெருக்கமும், ஆனைப்பெருக்கமுங்குதிரைப்பெருக்கமு மவனிமுழு
கினுநெருங்கவே, மோனைக்கொடிகளின்காடுநெடுவெளிமூடியடங்
கலுமோடியிருண்டபி, னேனைச்சுடர்விரிவிடபகேதன மெழுந்துதி
சைதிசைவிளங்கவே. (பவனி)

௮. கொத்துமலர்க்குழல்தெய்வமங்கையர்குரவைபாலவையைநெருக்கவே
யொத்ததிருச்செவியிருவர்பாடல்களுலகமேழையுமுருக்கவே
மத்தளம்புயல்போன்முழங்கிடபயிலனோர்நடம்பெருக்கவே
சத்தியபிரவிகௌரிகுழன்மொழித்தையலாளிடமிருக்கவே (பவ)

பவனிகாணப்பெண்கள்வருகிற

விருத்தம்.

பாலேறும்விடையில்வருந்திரிகூடப்பெருமானார்பவனிகாணக்
காலேறுங்காமனுக்கைகபேறாப்படைப்பவுஞ்சாய்ககன்னிமார்கள்
சேலேறுங்கலகவிழிக்கணைதீட்டிப்புருவநெடுஞ்சிலைகள்கோட்டி
மாலேறப்பொருதுமென்றுமணிச்சிலம்புமுரசறையவருகின்றாரே.

பெண்கள்சொல்லுகின்ற-கண்ணிகள்.

இ-ம்-புன்னாகவராளி - சாப்புதாளம்.

௧ ஒருமானைப்பிடித்தவர்தபெருமானைத்தொடர்ந்தவரு
மொருகோடிமான்கள்போல் வருகோடிமடவார்

௨ புரிநூலின்மார்பனிவனயனென்பாரயனுக்
பொங்கரவமேதுதனிச் சங்கமேதென்பார்

௩ விரிகருணைமாலென்பார்பாலாகில்விழியின்மேல்
விழியுண்டோமுடியின்மேல் முடியுண்டோவென்பார்

௪ இருநாலுநான்முகனுந்திருமாலும்வருகையா
லீசனிவன்திரிகூட வாசனிவனென்பார்

௫ ஒருகைவளைபூண்டபெண்கள்ஒருகைவளைபூணமறந்
தோடுவார்நகைப்பவரை நாடுவார்கவிழ்வார்

௬ மெய்வளையுமறுவுடையதெய்வநாயகன்முடித்த
வெண்மதியும்விளங்குதெங்கள் பெண்மதியோவென்பார்

௭ இருகனத்துரவிக்கைதன்னையரையினுடைதொடுவார்
இந்தவுடைரவிக்கையெனச் சந்தமுலைக்கிடுவார்

௮ கருதுமனம்புறம்போகக்கண்ணுக்குமையெடுத்த
கையுமாயொருகண்ணிட்ட மையுமாய்வருவார்

௯ நிருபனிவனன்னகரத்தெருவிலேநெடுநேரம்
நில்லானோஒருவசனஞ் சொல்லானோவென்பார்

௰ கைவளைத்துக்கிடக்குமிவன்மெய்வளையும்பாம்புகட்குப்
பசியாதோதென்றலைத்தான் புசியாதோவென்பார்

௰௧ இவ்வளைக்கைத்தோளழுந்தவிவன்மார்பிலழுந்தாத
தென்னமுலைநமக்கெழுந்த வன்னமுலையென்பார்

௰௨ மைவளையுங்குழல்சோரக்கைவளைகொண்டானிதென்ன
மாயமோசடைதரித்த ஞாயமோவென்பார்

வசந்தவல்லிவருகின்ற-விருத்தம்.

நன்னகர்ப்பெருமான்போய்நாணமுங்கலையுந்தோற்ற
கன்னியர்கதப்போற்காட்டிக்காமவேள்கலக்கமூட்டிப்
பொன்னணிதிலதந்தீட்டிப்பூமலர்மாலைசூட்டி.
வன்னமோகினியைக்காட்டிவசந்தமோகினிவந்தாளே.

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. சிங்காரபூஷணமும்பூட்டித்-திலதந்தீட்டி
மாரனைக்கண்ணாலேமருட்டிச்
சிங்காரமோகனப்பெண்ணாள்வசந்தவல்லி
தெய்வரம்பைப்போலவேவந்தாள்

௨. கண்ணுக்குக்கண்ணிணைசொல்லத்-திரிகூடற்
கண்ணுதலைப்பார்வையால்வெல்லப்
பெண்ணுக்குப்பெண்மயங்கவே-வசந்தவல்லி
பேடையன்னம்போலவேவந்தாள்

௩. கையாரச்சூடகமிட்டே-மின்னாரைவெல்லக்
கண்ணிலொருநாடகமிட்டு
ஒய்யாரமாகநடந்து-வசந்தவல்லி
யோவியம்போலவேவந்தாள்

௪. சல்லாபமாதுலீலர்-குற்றாலநாதர்
சங்கநெடும்வீதிதனிலே
உல்லாசமாதரதிபோல்-வசந்தவல்லி
யூர்வசியுநாணவேவந்தாள்.

இதுவுமது.

இ-ம்-பைரவி- அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧ இருண்டமேகஞ்சுற்றிச்சுருண்டுசுழியெறியுங்கொண்டையாள்-கு
ழை [ழை
எறியாடிநஞ்சைச்சூறையாடும்விழிக்கெண்டையாள்
திருந்துபூமுருக்கினரும்புபோலிருக்குமிதழினாள்-வரிச்
சிலையைப்போல்வளைந்துபிறையைப்போலிலங்குநுதலினாள்

௨ அரம்பைதேசவில்லும்விரும்பியாசைசொல்லும்புருவத்தாள்-பிறர்
அறிவைமயக்குமொருகருவமிருக்குமங்கைப்பருவத்தாள்
கரும்புபோலினித்துமருந்துபோல்வடித்தசொல்லினாள்-கடல்
கத்துந்திரைகொழித்தமுத்துநிரைபதித்தபல்லினாள்

௩ பல்லினழகையெட்டிப்பார்க்குமூக்கிலொருமுத்தினாள்-மதி
படரும்வடிவுதங்கியழகுகுடிகொளுமுகத்தினாள்
வில்லுப்பணிபுனைந்துவல்லிக்கமுகைவென்றகழுத்தினாள்-ஜகம் [ன்
விலையிட்டெழுதியின்பநிலையிட்டெழுதுந் தொய்யிலெழுத்தினா

௪ கல்லுப்பதித்ததங்கச்செல்வக்கடகமிட்டசெங்கையாள்-எங்குங்
கச்சுக்கிடக்கினுந்தித்திச்சுக்கிடக்குமிருகொங்கையாள்
ஒல்லுங்கருத்தர்மனக்கல்லுஞ்சுழிக்குமெழிலுந்தியாள்-மிகு
ஒழுங்குகொண்டுள்ளத்தைவிழுங்குஞ்சிறுரோமபந்தியாள்

௫ துடியுள்ளடங்கியொருபிடியுள்ளடங்குஞ்சின்னவிடையினாள்-காமத்
துட்டனரண்மனைக்குக்கட்டுங்கதலிவாழைத்துடையினாள்

அடிக்குவர்ணச்சேலையெடுத்துநெறிபிடித்தவுடையினாள்-பட
வன்னநடையிலொருசின்னநடையினாள்
௩ வெடித்தகடலமுதையெடுத்துவடிவுசெய்தமேனியாள்-ஒரு
விபப்பாகம்பெற்றகாயப்பாலுக்கொத்தசீனியாள்
பிடித்தசுகந்தவல்லிக்கொடிபோலவசந்தவல்லி பெருக்கமே-சத்தி
பீடவாசர்திரிகூடநாதர்சித்தமுருக்குமே

வசந்தவல்லி பந்தடிக்கின்ற

விருத்தம்.

வித்தகர்திரிகூடத்தில்வெளிவந்தவசந்தவல்லி
தத்துறுவிளையாட்டாலோ தடமுலை னைப்பினாலோ
நந்தணிகரங்கள்சேர்ப்ப நாலடிமுன்னேயோங்கிப்
பத்தடிபின்னேவாங்கிப் பந்தடிபயில்கின்றாளே.

இ-ம்-பைரவி சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧ செங்கையில்வண்டுகலீர்கலீரென்றுசெயஞ்செயமென்றாட-இடை
சங்கதமென்றுசிலம்பொடுதண்டைகலந்தாட இரு [லர்ப்
கொங்கைகொடும்பகைவென்றனமென்றுகுழைந்துகுழைந்தாட-ம
பைங்கொடிநங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே [மங்

௨ பொங்குகனங்குழைமண்டியகெண்டைபுரண்டுபுரண்டாடகுழன்
குலில்வண்டுக்கலைந்ததுகண்டுமதன்சிலைவண்டோட-இனி
இங்கிதகண்டுலகென்படுமென்படுமென்றிடைதிண்டாட-மலர்ப்
பங்கயமங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே

௩ கூடகமுன்கையில்வாள்வளைகண்டிருதோள்வளைநின்றாட-புனை
பாடகமுஞ்சிறுபாதமுமங்கொருபாவைகொண்டாட-நப
நாடகமாடியதோகையிலெனநன்னகர்வீதியிலே-அணி
யாடகவல்லிவசந்தவொய்யாரியடர்ந்துபந்தாடினளே

௪ இந்திரையோவிவள்சுந்தரியோதெய்வரம்பையோமோகினியோ-மன
முந்தியதோவிழிமுந்தியதோகரமுந்தியதோவெனவே-உயர்
சந்திரசூடர்குறும்பலவீசுரர்சங்கணிவீதியிலே-மணிப்
பைந்தொடிதாரிவசந்தவொய்யாரிபொற்பந்துகொண்டாடினளே

இதுவும் வசந்தவல்லி பந்தாடுகின்ற

விருத்தம்.

கொந்தடிப்பூங்குழல்சரியநன்னகரில்வசந்தவல்லிகொடியகாமன்
முந்தடிபிந்தடியிடைபோய்முன்றடிநாலடிநடந்துமுடுகிமாதர்
சந்தடியிற்றிருகியிடசாரிவலசாரிசுற்றிச்சகிமார்சூழப்
பந்தடிக்கும்பாவனையைப்பார்க்கவாயிரங்கண்படைத்திலானே.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

பந்தடித்தனள் வசந்தசுந்தரி-விந்தையாகவே

அநுபல்லவி.

[illegible]தாமுலையேசலாட மகரக்குழைகளேசலாடச்— சுந்தரவிழிபூசலாடத்
தொங்கத்தொங்கத்தொங்கத்தொம்மெனப் பந்து

சரணங்கள்.

௧. பொன்னிறொளிவில்வந்துதாவியமின்னிறொளிவுபோலவே
சொன்னயத்தனோடிநாடித்தோழியருடன்கூடிக்கூடி
நன்னகர்த்திரிகூடம்பாடிநகுர்ததத்திகுதிகுர்ததோமெனப் பந்து

வசந்தவல்லி—சுவாமிகளைக்காண்கின்ற

விருத்தம்.

வருராங்குவீதிதன்னில்வசந்தபூங்கோதைகாலி
விருபந்துகுதிகொண்டாட விருபந்துமுலைகொண்டாட
வொருபந்துகைகொண்டாட வொருசெப்பிலஞ்சிபந்துந்
தெருவந்துவித்தையாடுஞ்சித்தரையெதிர்கண்டாளே.

தரு—இ—ம்—அடாணா—ரூபகதாளம்.

பல்லவி.

இந்தச்சித்தாரோ-வெகு

அநுபல்லவி.

விந்தைக்காராகவிடையில்வந்தாரோ இந்தச்

சரணங்கள்.

௧. நாகப்புயத்திற்கட்டிநஞ்சுகழுத்திற்கட்டிக்
காகமணுகாமலெங்குங்காடுகட்டி
பாகந்தனிலொருபெண்பச்சைக்கிளிபோல்வைத்து
யோகமாயொருபெண்ணைமுடியில்வைத்தார் இந்தச்

௨. மெய்யிற்சிலம்பழகுங்கையின்மழுவழகும்
மையார்விழியார்கண்டால்மயங்காரோ
செய்யசடையின்மேலேதிங்கட்கொழுந்திருக்கப்
பையைவிரிக்குதம்மாபாம்புசும்மா இந்தச்

௩. அரைக்கண்பார்வையாலேயனங்கன்றங்கமாக
உருக்கிப்போட்டார்கண்டவுடனேதான்
பெருக்கம்பார்க்கிலெங்கள்திருக்குற்றாலர்போல
விருக்குதிவர்செய்மாயமொருக்காலே இந்தச்

தோழிமார்சொல்லக்கேட்டு வசந்தவல்லி- மோகங்கொள்ளுதல்.

விருத்தம்.

திங்களைமுடித்தார்கண்டாய்திரிகூடச்செல்வர்கண்ட
யெங்குளசித்துக்கெல்லாமிறையவரிவரேயென்று
நங்கைமார்பலருங்கூறநன்மொழித்தேறன்மாற்றி
மங்கையர்வசந்தவல்லிமனங்கொண்டாள்மயல்கொண்டாளே.

இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

க. முனிபாவுவினியானேமுழுப்பலவின்கனிதானே
கனியில்வைத்தசெந்தேனேகருத்திருக்கவந்தானே
தினகரன்போற்சிவப்பழகுந்திருமிடற்றிற்கறுப்பழகும்
பனகவணிக்காதுங்கண்டாற்பாவையுந்தானுருகாதோ.

உ. வாகனைக்கண்டுருகுதையோமயக்கமதாய்வருகுதையோ
மோகமென்பதிதுதானோமுன்னமேநானறிவேனோ
ஆகமெல்லாம்பசந்தேனேயன்னைசொல்லுங்கசந்தேனே
தாகமன்றிப்பூணேனேசரிவளையுங்காணேனே.

பாங்கிகள்-புலம்பல்.

விருத்தம்.

நடைகண்டாலன்னந்தோற்குநன்னகர்வசந்தவல்லி
விடைகொண்டானெதிர்போய்ச்சங்கவீதியிற்சங்கந்தோற்றுள்
சடைகொண்டானுடைதான்கொண்டுதன்னுடைகொடுத்தாளைய
னுடைகொண்டவழக்குத்தானேவூர்கண்டதேர்கண்டானே.

இ-ம்-தோடி- சாப்புதாளம்.

கண்ணிகள்.

க. ஆசைகொண்டுபோரில்வீழ்ந்தாள்நேசமானென்பார்-விளை
யாடாள்பாடாள்வாடாமாலைசூடாள்காணேனென்பார்
பேசொணாதோமோசமென்னமோசமோவென்பார்
பேயோவென்பார்பிச்சோவென்பார்மாயமோவென்பார்

உ. ஐயோவென்னசெய்வோமென்பார்தெய்வமேயென்பார்-களைப்
பாச்சோவென்பார்மூச்சேதென்பார்பேச்சேதோவென்பார்
கையிற்றிருநீறெடுப்பார்தையலாரெல்லாம்-சூலக்
கையாதிரிகூடநாதாகண்பார்யென்பார்

வசந்தவல்லியைப் பாங்கிகளுபசரித்தல்.

விருத்தம்.

வானவர்திருக்குற்றாலர்மையலால்வசந்தவல்லி
தானுடல்சோர்ந்தாளென்றுதமனியமாடஞ்சேர்ந்து
மேனையாரழகுதோற்றமின்னனார்விழிந்தபேணைக்
கூனைகொண்டெமிழ்த்துவார்போற் குளிர்ச்சியால்வெதுப்புவாரே.

இ-ம்—கல்யாணி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

க. முருகுசந்தனக்குழம்புபூசுவார்—விரகத்தீயை
மூட்டிமூட்டிவிசிறிவீசுவார்
கருகுதேயுடலுருகுதேயென்பார்—விரித்தபூவுங்
கரியுதேமுத்தம்பொரியுதேயென்பார்

உ. அருகிலிருந்துகதைசண்டத்துவார்—எடுத்துமாதர்
அணைத்துவாழைக்குருத்திற்கிடத்துவார்
பெருகுநன்னகர்க்குறும்பலாவினார்—வசந்தமோகினி
பெருநிலாவினொடுகுலாவினாள்.

வசந்தவல்லி-சந்திரதூஷணஞ்செய்தல்.

விருத்தம்.

பெண்ணிலோர்குழன்மொழிக்கோர்
பங்குகொடுத்தவர்கொடுத்தபிரமையாலே
மண்ணிலேமதிமயங்கிக்கிடக்கின்றே
னுனக்குமதிமயக்கந்தானோ
கண்ணிலேநெருப்பைவைத்துக்
காந்துவாருடன்கூடிக்காந்திக்காந்தி
விண்ணிலேநெருப்பைவைத்தாய்
தண்ணிலாக்கொடும்பாவிவெண்ணிலாவே.

இ-ம்—வராளி—ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. தண்ணமுதுடன்பிறந்தாய்	வெண்ணிலாவே—அந்தத்
தண்ணளியையேன்மறந்தாய்	வெண்ணிலாவே
பெண்ணுடன்பிறந்ததுண்டோ	வெண்ணிலாவே-என்றன்
பெண்மைகண்டுங்காயலாமோ	வெண்ணிலாவே
உ. விண்ணிலேபிறந்தவற்கோ	வெண்ணிலாவே — எரு
விட்டநோனெறிந்ததற்கோ	வெண்ணிலாவே

கண்ணில்விழியாதவர்போல் வெண்ணிலாவே-மெத்த
காந்தியாட்டமாடுகிருய் வெண்ணிலாவே

௩. ஆகடியம்செய்தல்லவோ வெண்ணிலாவே - நீதா
ஞட்சடியம்போற்குறைந்தாய் வெண்ணிலாவே
மோகம்வாக்காணேனென்ருல் வெண்ணிலாவே - அந்த
வேகமுனக்கானதென்ன வெண்ணிலாவே

௪. நாகமென்றேயெண்ணவேண்டாம் வெண்ணிலாவே - இது
வாருகுழல்பின்னல்கண்டாய் வெண்ணிலாவே
கோகனகவீறழித்தாய் வெண்ணிலாவே - திரி
கூடலிங்கர்முன்போய்க்காய்வாய் வெண்ணிலாவே

வசந்தவல்லிமன்மததூஷணஞ்செய்தல்.

விருத்தம்.

தண்ணிலாமௌலிதந்தமையலானதையறிந்துதையலார்கள்
எண்ணிலாப்பகையெடுத்தாரின்னகரநன்னகரென்றவர்சொன்னுரோ
அண்ணலார்திரிகூடநாதரென்பாரென்னளவுமறைந்திட்டாரோ
வெண்ணிலாக்குடைபிடித்துமீனகேதனம்பிடித்தவேனிலானே.

இ-ம்-எதுகுலகாம்போதி- சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧. கைக்கரும்பென்னகணையென்னநீயென்ன மன்மதா - இந்தச்
செக்கரும்பாவிநிலாவுமேபோதாதோ மன்மதா
மைக்கருங்கண்ணுளிரதிக்குமால்கொண்ட மன்மதா - விடை
வல்லார்க்குமால்கொண்டபொல்லாப்பெண்மேலுண்டோமன்

௨. திக்கெல்லாந்தென்றற்புலிவந்துபாயுதே மன்மதா - குயிற்
சின்னம்பிடித்தபினன்னம்பிடியாதே மன்மதா
அக்காளனுஞ்சகிவெட்காமலேசுவாள் மன்மதா - அவ
ளல்லாமற்றுருவொருபொல்லாதநீலிகாண் மன்மதா

௩. சேரிழைபாணமூணையும்பாரடா மன்மதா - கண்ணில்
நித்திரைதாஞெருசத்துருவாச்சுதே மன்மதா
பேரிகையேனன்றிபூரிகையேன்பிள்ளாய் மன்மதா - சிறு
பெண்பிள்ளைமேற்பொருதான்பிள்ளையாவையோ - மன்மதா

௪. வார்சடையிதல்லதார்குழற்பின்னல்காண் மன்மதா - நெற்றி
வந்ததுகண்ணல்லசிந்தூரரேகைபார் மன்மதா

காரிபங்காளர்தென்னாரியநாட்டினர் மன்மதா—எங்கள்
நன்னகர்குற்றாலர்முன்னமேசெல்லுவாய் மன்மதா

பாங்கிவினாவுதல்—விருத்தம்.

படியேழுடையார்திரிகூடப்படைமாமதனைப்பயிற்றியசொல்
அடியேசகியாதிருக்கையிலேயதுநான்பயின்றாலாகாதோ
கொடியேமதுரம்பழுத்தொழுகுங்கொம்பேவம்புபொருதமுலைப்
பிடியேயெமதுகுடிக்கொருபெண்பிள்ளாய்கருத்துவிள்ளாயே.

வசந்தவல்லி-பாங்கிக்குரைத்தல்.

இ-ம்-கல்யாணி— சாப்புதாளம்.

கண்ணிகள்.

க. மெய்யார்க்குமெய்யாதிரிகூடநாயகர்மீதில்-மெத்த
மையல்கொண்டேனந்தச்செய்தியைக்கேளாய்நீசகியே
செய்யச்சடையுந்திருக்கொன்றைமாலையழகு-மவர்
கையின்மழுவுமென்கண்ணைவிட்டேயகலாதே.

உ. கங்கைக்கொழுந்தணிதெய்வக்கொழுந்தைநான்கண்டு—குளிர்
திங்கட்கொழுந்தையுந்தீக்கொழுந்தாக்கிக்கொண்டேனே
சங்கக்குழையானைச்சங்கமறுகினிற்கண்டு—இரு
செங்கைக்குட்சங்கமுஞ்சேர்ந்துமருவிட்டேனே.

ங. மன்றற்குளவிதினங்கொட்டக்கொட்டநொந்தேனே
தென்றற்குளவிதினங்கொட்டக்கொட்டநொந்தேனே
குன்றச்சிலையாளர்குற்றாலநாதர்முன்போனேன்-மதன்
வென்றிச்சிலைகொண்டுமெல்லவெல்லப்பொருதானே

ச. பெம்மானைநன்னகர்ப்பேராஜவீதியிற்கண்டு
கைம்மானைக்கண்டுகலையைநெகிழவிட்டேனே
செம்மேனிதன்னிற்சிறுகறுப்பானைநான்கண்டு—இப்போ
அம்மாவென்மேனியடங்கலுமேகறுத்தேனே.

ரு. வெள்ளிவிடையில்வியாழப்புனைந்தானைக்கண்டு-இந்த
நள்ளியதிங்களைஞாயிறுபோலக்கண்டேனே
எள்ளளவூணுமுறக்கமுமில்லானைக்கண்டு-நானும்
ஒள்ளியவூணுமுறக்கமுமற்றுவிட்டேனே.

பாங்கிபழித்தல்-விருத்தம்.

தனைப்பெண்ணிக்கணுபோல்வந்ததமனியக்கொடியேமாதர்
துணைப்பெண்ணேவசந்தவல்லிசொன்னபேதமைக்கென்சொல்வேன்
வரைப்பெண்ணுக்காசைபூண்டுவளர்சங்கமறுகினூடே
நரைத்தமாடேறுவார்க்கோநங்கைநீமயல்கொண்டாயே.

வசந்தவல்லி—சுவாமிகளைப்புகழ்ந்து கூறல்.

இ—ம்—சௌராஷ்டிரம்- ரூபகதாளம்.

கண்ணிகள்.

மன்னவர்குற்றாலர்செய்தியின்னமின்னங்கேளாயேமானே-அவர்
வாகனத்தின்மால்விடைக்குலோகமெல்லாமோடிகண்மானே
சன்னிதியின்பேறல்லவோபொன்னுலகிற்றேவர்செல்வமானே-தினஞ்
சந்திரரும்சூரியரும்வந்திறங்கும்வாசல்கண்டாய்மானே
நன்னகரிலிருக்குநாளொருத்திதானேவாசைகொண்டேன்—மானே
கன்னியருமாசைகொண்டார்பன்னியருமாசைகொண்டாமானே
தென்னிலங்கைவாழுமொருகன்னிகைவண்டோதரியாள்மானே-அவ
ர்-பொன்னடியிற்சேர்ந்தணையஎன்னதவஞ்செய்தாளோ மானே

இதுவும்-வசந்தவல்லிபாங்கிகளுக்குச்சொல்லுகிற

விருத்தம்.

வேரிலேபழம்பழுத்தூரிலேசுளைவெடித்துவெடித்ததீந்தேன்
பாரிலேபாதாளகங்கைவந்ததெனக்குதித்தபதித்தேன்கங்கை
நீரிலேசுளைபெருகுங்குறும்பலாக்கொலுவிருக்குநிமலமூர்த்தி
பேரிலேபிரமைகொண்டபெண்களிலே நானுமொருபெண்கண்டாயே.

பாங்கிசொல்— விருத்தம்.

வசந்தவல்லாசவல்லிவல்லிக்குவெல்விபேசி
பசந்ததோர்பசப்புங்கண்டால்பாமன்மேலாசைகொண்டாய்
நிசந்தருந்திருக்குற்றாலநிரந்தரமூர்த்தியுன்பா
லிசைந்திடக்கருமமேதோவிசையநீயிசைத்திடாயே.

வசந்தவல்லி—வருந்துதல்.

இ—ம்-நாதநாமக்கிரியை—ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. புரத்துநெருப்பைமூவர்க்கவித்தவர்மையல்கொண்ட வென்
னொருத்திகாமநெருப்பையவிக்கலார்
பருத்தமலையைக்கையிலிணக்கினர் கொங்கையான
பருவமலையைக்கையிலிணக்கிலார்

௨. அஞ்சுதலைக்குளாறுதலைவைத்தோர் எனதுமனதினில்
அஞ்சுதலைக்கோராறுதலைவையார்
நஞ்சுபருக்கியமுதங்கொடுத்தவர் எனதுவாள்விழி
நஞ்சுபருக்கியமுதங்கொடுக்கிலார்

௩. தேவர்துணைதன்சாபந்தீர்த்தவர் வன்னமாங்குயிற்
சின்னத்துணைதன்சாபந்தீர்ந்திலார்
யாவரும்புகழ்திருக்குற்றாலர்தாம் சகலபேர்க்கு
மிரங்குவாரெனக்கிரங்கிலார்பெண்ணே

பாங்கிசொல்லுகிற—விருத்தம்.
நன்னகர்திருக்குற்றாலநாதர்மேலாசைபூண்டு
சொன்னவர்க்கிணங்காவார்த்தைசொல்லவும்படித்துக்கொண்டாய்
சன்னிதிவிசேஷஞ்சொல்லத்தக்கதோமிக்கதோதான்
என்னிலானதுநான்சொன்னேனினியுனதிச்சைதானே.

வசந்தவல்லிபாங்கியைத் தூதனுப்புதல்.

தரு—இ—ம்—காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

தூதுநீசொல்லிவாராய்பெண்ணே—குற்றாலர்முன்போய்த்
தூதுநீசொல்லிவாராய்பெண்ணே

அநுபல்லவி.

ஆதிநாட்சுந்தரர்க்காய்தூதுபோனவர்பாலே தூதுநீ

சரணங்கள்.

க. உறங்கவுறக்கமும்வாராது-மாயஞ்செய்தாரைமறந்தால்மறக்கவுங்கூடாது—பெண்ஜனனமென்று—பிறந்தாலும்போராசையாகாது—ஆகாதென்றுநான்-அறிந்துஞ்சலுகைக்காரர்க்காசையானேனிப்போது—(தூது) உ. நேற்றைக்கெல்லாங்குளிர்ந்துகாட்டி- இன்றுகொதிக்கும்பித்திலாப்பாவிக்கென்னபோட்டி—நடுவேயிந்தக் - காற்றுக்குவந்ததொருகோட்டிவிரகநோய்க்கு-மாற்றுவருந்துமுக்கண்மருந்தென்றுபாஞ்சாட்டி (தூது) ௩. வந்தாலிந்நேரம்வரச்சொல்லு-வாராதிருந்தால்-மாலையாகிலுந்தாச்சொல்லு - குற்றாலநாதர் — தந்தாலென்னெஞ்சைத்தாச்சொல்லு—தாராதிருந்தால்—தாய்பெண்ணுகியபெண்ணை நான் விடேனென்றுசொல்லு (தூது.)

வசந்தவல்லி—பாங்கிக்குச்சந்திசமயஞ்சொல்லுதல்.

விருத்தம்,

செவ்வேளையின்றருள்வார்சிலவேளை யென்றருள்வார்திரும்பத்தாமே
யவ்வேளையழைத்தருள்வாரார்வேளையொருவருக்குமறியொணாதா
கைவேழமுரித்தவர்குற்றாலர்கொலுவமாருக்குங்காணொணாதால் [ல்
எவ்வேளைபலவுமுண்டுவியல்வேளையான்சொலக்கேளாயின்னனுளே.

தரு—இ—ம்—பியாகடை- ஆதிதாளம்,

க. திரிகூடராஜருக்குத்திருவனந்தல்முதலாகத்
தினமுமொன்பதுதரங் கொலுவிற்சகியே
உ. பெரிதானவபிஷேகமெழுகாலமுமொருவர்
பேசுதற்குச்சமயமல்ல கண்டாய்சகியே
௩. வருநாளிலொருமூன்றுதிருநாளும்வசந்தனு
மாதவழிவருஷவழி சிறப்புஞ்சகியே

௪. ஒருநாளுக்கொருநாளில்வியனுகக்குழன்மொழிப்பெண்
ணுகந்திருக்குங்கொலுவைவ கண்டாய்சகியே
௫. பெத்தரிக்கமிகுந்திருங்குற்ருலநாதலிங்கர்
பெருங்கொலுவிற்சமய மறியாமற்சகியே
௬. சித்தரொடுதேவர்கணஞ்சிவகணங்கள்தடைசெயத்
திருவாசற்கடைநிற்பார் சிலபேர்சகியே
௭. அத்தலையிற்கடந்தவர்கள்நந்திபிரம்படிக்கொதுங்கி
ஆட்கொண்டார்குறட்டில்நிற்பார் சிலபேர்சகியே
௮. மைத்தருங்கண்மாதர்விட்டவண்டுகளுங்கிள்ளைகளும்
வாசல்தொறுங்காத்திருக்கும் கண்டாய்சகியே
௯. கோலமறையோதியசங்கரவிசுவநாதனருள்
குற்ருலச்சிவாகமம் செய்யுஞ்சகியே
௰. பாலாறுநெய்யாருயபிஷேகநைவேத்தியமும்
பணிமாறுகாலமுங் கொண்டருளிச்சகியே
௧௧. நாலுமறைப்பழம்பாட்டுமூவர்சொன்னதிருப்பாட்டு
நாலுகவிப்புலவர்புதுப் பாட்டுஞ்சகியே
௧௨. நீலகண்டர்குற்ருலர்தேவியுடன்கொலுவிருப்பார்
நீக்கமில்லையெல்லார்க்கும் பொதுக்காண்சகியே
௧௩. அப்பொழுதுகுற்ருலர்தேவியுடன்கொலுவிருப்பார்
ஆசைசொல்லக்கூடாது கண்டாய்சகியே
௧௪. முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்வந்துநின்று
முயற்சிசெய்யுந்திருவநந்தற் கூடிச்சகியே
௧௫. கொப்பழகுகுழன்மடந்தைபள்ளியறைதனிலிருந்து
கோயில்புகுமேகாந்தச் சமயஞ்சகியே
௧௬. மைப்பழகுவிழியாயென்பெருகாளைநீசொல்லி
மறுமாலைவாங்கிநீ வாராய்சகியே

கொச்சகம்.

தெண்ணீர்வடவருவித்தீர்த்தத்தாற்செஞ்சடைமேல்
விண்ணீர்புனைந்தார்விரகவெம்மைக்காற்ருமல்
கண்ணீர்நறும்புனலாய்க்கைவளையேசெய்கணையாய்ப்
உண்ணீரிற்கூடலுரைக்கிணறுசெய்வாளே.

கூடல்சிந்து.

இ-ம்-பந்துவராளி- தாளம்- திரிபுடை

௧. பாடியமறைதேடியநாயகர்பன்னகர்பணிநன்னகர்நாயகர்
பாவலர்மனுககாவலர்நாயகர்பதஞ்சலிபணியாளர்
௨. கோடியமதிசூடியநாயகர்குழன்மொழிபுணரழகியநாயகர்
குறும்பலாவினிற்கூடுவாரேனிற்கூடலேநீகூடாய்.

விருத்தம்.

ஆடல்வளைவீதியிலேயங்கணர்முன்போட்டசங்கமாங்குவீட்டில்
தேடல்வளைக்குறிபோலக்கூடல்வளைத்திருந்துவல்லிதியங்கும்போதில்
கூடல்வளைக்கரமசையமாத்திரைக்கோலேந்திமணிக்கூடைதாங்கி
மாடமருகூடதிரிகூடமலைக்குறவஞ்சிவருகின்றாளே.

குறத்திவருதல்-ஆசிரியப்பா.

சைவமுத்திரையைவானின்மேற்றருக்குக்
தெய்வமுத்தலைசேர்திரிகூடமலையான்
வான்புனல்குதட்டுமடைக்குருகினுக்குத்
தேன்புரையேறுபூஞ்சித்திரநதியான்
ஏரிநீர்செழிக்கவாரிநீர்கொழிக்கு
மாரிநீர்வளர்தென்னாரியநாட்டான்
கன்னிமாப்பழுத்துக்கதலிதேன்கொழித்துத்
செந்நெல்சாததளிக்குநன்னகர்ப்பதியான்,
ஓராயிரமறையோங்கியபரியான்
ஈராயிரமருப்பேந்தியயானையான்
சேகவிருதுஜெயவிடைக்கொடியான்
மூவகைமுரசுமுழங்குமண்டபத்தான்
அண்டகோடிகளையாணையாலடக்கிக்
கொண்டல்போற்கவிக்குங்கொற்றவெண்குடையான்
வாலசுந்தரிகுழல்வாய்மொழியருட்கண்
கோலவண்டிணங்குங்கொன்றைமாலிகையான்
பூவளர்செண்பகக்காவளர்தம்பிரான்
தேவர்கள்தம்பிரான்திருவருள்பாடி
இறகுநீறணிந்துதிலகமுமெழுதிக்
குல்மணிப்பாசியுங்குன்றியும்புனைந்து
சலவைசேர்மருங்கிளிற்சாத்தியகூடையும்
வலதுகைப்பிடித்தமாத்திரைக்கோலும்
மொழிக்கொருசப்புமுலைக்கொருகுலுக்கும்
விழிக்கொருசிமிட்டும்வெளிக்கொருபகட்டுமாய்
உருவசியரம்பைகருவமுமடங்க
முறுவலின்குறும்பால்முனிக்குறும்படங்க
சமனிக்குமுறையால்சபையெலாமடங்கக்
கமனிக்குமவனுங்கடைக்கண்ணாலடங்கக்
கமனுக்குமவனுங்கடைக்கணாலடங்கக்
கொட்டியவுடுக்குங்கோடாங்கிக்குறிமுதல்

பட்டிலாக்குறிகளுங்கட்டினுலடக்கிக்
கொங்கணமாரியங்குச்சிலர்தேசமும்
கொங்கைமாத்திரைக்கோலசெங்கோல்நடாத்தி
கன்னடந்தெலுங்குகலிங்காச்சியமுந்
தென்னவர்தமிழாலசெயததம்பநாட்டி
மன்னவர்தமக்குவலதுகைநோக்கி
காலமுன்போங்குறிகைப்பலனுங்குறி
மேலினிவருங்குறிவேண்டுவார்மனக்குறி
மெய்க்குறிகைக்குறிவிழிக்குறிமொழிக்குறி
எக்குறியாயினுமிமைப்பினிலுரைக்கு
மைக்குறிவிழிக்குறவஞ்சிவந்தனளே

இதுவுமது-விருத்தம்.

சில்லறுதலிற்கஸ்தூரித்திலதமிட்டுநறுங்குழலிற்செச்சைசூடிக்
கொலைமாதர்க்கண்மையெழுதிமாத்திரைக்கோல்வாங்கிமணிக்கூடைதா
முலைமுகத்திற்றுன்றிமணிவடம்பூண்டுதிரிகூடமுதல்வர்சாரல் (ங்கி
மலைதனிற்போனவஞ்சிகுறவஞ்சியொருஞ்சிகொஞ்சிவருகின்றாளே.

தரு-இ-ம்-தோடி-சாப்புதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தனளே-மலைக்குற-வஞ்சிவந்தனளே.

அநுபல்லவி.

வஞ்சியெழில்பாஞ்சவரிவிழி நஞ்சிமுழுமறநெஞ்சிபலவினை
வஞ்சிசடைமுடியஞ்சையமலனை நெஞ்சினிலொருமிஞ்சுகுறிசொல

சரணங்கள்.

க. வல்லிசிகர்முலையில்லையெனுமிடை-வில்லையணிநுதல் முல்லையெருக்கைகவெல்லவியெனவொருகொல் விமலைதனில்வல்லியமுளிலும் வெல்லியிலெளன-நல்லிவடகனடில்லிவளாபுகல்புல்லிவருகுறிசொல்லி பதுரித்தல்பிணிமலைவல்லீகுழன் மொழிச்செல்வியுணர்பவர் கல்லிமலைக்குற (வஞ்சி)

உ. கன்றிவிழிமைழுமின்கள்ளனைவினை குன்றிவடமுலைமுங்கவே யன்றக்காமஞ்சிறுதென்றல்வருவழிநின்றுதாளமில்ங்கவே - ஒன்றி விறிபுமென்றிய மதனனுமுசைவிடுகுழைபொங்கவே-என்றுமெழுதிய மன்றில் நடமிடுகின்றசாலினர்வென்றிமலைக்குற, (வஞ்சி)

௩. ஆடுமிருகுழை தோடுமொருகாற்சாடுமிணைவிழிசாடவே-கோடுபொருமுலைமுடிசைவயிறாடுபிதுங்கமலாடவே-தோடிமுரளிவராளி பயிரவிமோகனமுறவினையாடியே நிதிமலைபயிலாடுமலை பதிருநடமிடுதிரிகூடமலைக்குற. (வஞ்சி)

குறத்தியைவர்ணித்தல்

கொச்சகக்கலிப்பா.

முன்னங்கிரிவளர்த்த முக்கணர்குற்றாலர்வெற்பில்
கன்னங்கரியகுழற் காமக்குறவஞ்சி
பொன்னின்குடம்போற் புடைத்தெழுந்தபாரமுலை
யின்னம்பருத்திட்டா லிடைபொறுக்கமாட்டாதே.

தரு-இ-ம். தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தாள்-மலைக்குற-வஞ்சிவந்தாள்

அநுபல்லவி.

வஞ்சிவந்தாள்திரிகூடாஞ்சிதமோகினிமுன்னே
மிஞ்சியவிரகநோய்ச் சஞ்சீவிமருந்துபோலே (வஞ்சி).

க. நம்மையுலகெங்கும்வெல்லக்கொம்மைமுலையார்க்கும்நல்ல
செம்மையாய்க்குறிகள்சொல்ல அம்மையம்மேயென்றுசொல்ல-வ
உ. சோலையில்வசந்தகாலம்வரக்கோகிலம்வந்தாற்போல்
சாலமலைவில்லியார்குற்றாலமலைவாழுங்குற வஞ்சி
௩. மாத்திரைக்கோலதுதன்னைச்சாத்திரக்கோலைப்பன்னத்
தோத்திரவடிவமின்னைப்பூத்தமலர்க்கொடியென்ன வஞ்சி

வசந்தவல்லிகுறத்தியைக்கண்டுமலையைவினவுதல்

ஆசிரியவிருத்தம்.

அந்தாதிதமிழ்முழங்குமன்னர்க் குற்றாலலிங்கருளைப்பாடி
வந்தகுறவஞ்சிதன்னைவசந்தவல்லிகண்டுமனமகிட்சிகொண்டு
சந்தமுலைத்துவளுமிடைத்துவளக்கைப்பவளவிதழ்த்தையலேயுன்
சொந்தமலையெந்தமலையந்தமலைவளமெனக்குச்சொல்லென்றாளே.

குறத்திசொல்லல்.

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

கண்ணிகள்.

க. வானரங்கள்கனிகொடுத்து மந்தியொடுகொஞ்சும்
மந்திசிந்துகனிகளுக்கு வான்கவிகள்கெஞ்சும்
உ. கானவர்கள்விழியெறிந்து வானவரையழைப்பார்
கமனசித்தர்வந்துவந்து காயசித்திவிளைப்பார்
௩. தேனருவித்திரையெழும்பி வானின்வழியொழுகும்
செங்கதிரோன்பரிக்காலுந் தேர்க்காலும்வழுக்கும்
ச. கூனலிளம்பிறைமுடித்த வேணியலங்காரர்
குற்றாலர்வாழ்திரிகூட மலையெங்கள்மலையே.

௫. முழங்குதிரைப்புனலருவி கழங்கெனமுத்தாடும்
முத்தமெங்கும்பார்துபெண்கள் சிற்றிலைகொண்டாடும்

௬. கிழங்குகிள்ளித்தேனெடுத்து வளம்பாடிநடப்போம்
கிம்புரியின்கொம்பொடித்து வெம்புதினையொடிப்போம்

௭. செழுங்குரங்குதேமாவின் பழங்களைப்பந்தடிக்கும்
தேனலர்சண்பகவாசம் வானுலகம்வெடிக்கும்

௮. வழங்குகொடைமகராசர் குறும்பலவிலீசர்
வளரும்பெருகுந்திரிகூட மலையெங்கள்மலையே

௯. ஆடுமரவீனுமணி கோடிவெயிலெறிக்கும்
அம்புலியைக்கவளமென்று தும்பிவழிமறிக்கும்

௧0, வேடுவர்கள்தினைவிளைக்கச் சாடுபுனந்தோறும்
விந்தையகில்குங்குமமுஞ் சந்தனமும்நாறும்

௧௧. காடுதொறுமோடிவரை யாடுகுதிபாயும்
காகமணுகாமலையில் மேகநிரைசாயும்

௧௨. நீடுபலவீசர்கயி லாசகிரிவாசர்
நிலைதங்குந்திரிகூட மலையெங்கள்மலையே

௧௩. கயிலையெனும்வடமலைக்குத் தெற்குமலையம்மே
கனகமகமேருவென நிற்குமலையம்மே

௧௪. கயிலைமலைதென்மலைக்கு வடக்குமலையம்மே
சகலமலையென்றனக்குள் ளடக்கமலையம்மே

௧௫. வயிரமுடன்மாணிக்கம் விளையுமலையம்மே
வானிரவிமுழைகள்தொறு நுழையுமலையம்மே

௧௬, துயிலுமவர்விழிப்பாகி யகிலமெங்குந்தேடும்
தூங்கர்திரிகூடமலை யெங்கள்மலையம்மே

௧௭, கொல்லிமலையெனக்கிளைய செல்லிமலையம்மே
கொழுநனுக்காணிமலை பழனிமலையம்மே

௧௮. எல்லுலவும்விந்தைமலை யெந்தைமலையம்மே
இமையமலையென்னுடைய சமயன்மலையம்மே

௧௯. சொல்லரியசாமிமலை மாமிமலையம்மே
சோழிமலைநாஞ்சிநாட்டு வேழிமலையம்மே

௨0. சொல்லினங்கள்முழவுகொட்ட மயிலினங்களாடும்
திரிகூடமலையெங்கள் செல்வர்மலையம்மே

௨௧. ஒருகுலத்திற்பெண்கள்கொடோம் ஒருகுலத்திற்கொள்ளோம்
உறவுபிடித்தாலும்விடோம் குறவர்குலநாங்கள்

௨௨. வெருவிவருந்தினைப்புனத்திற் பெருமிருகம்விலக்கி
வேங்கையாய்வெயில்மறைத்த பாங்குருகன்றனக்குவித்தே

௨௩. அருளிலஞ்சிவேலர்தமக் கொருபெண்ணைக்கொடுத்தோம்
ஆதினத்துமலைகளெல்லாஞ் சீதனமாய்க்கொடுத்தோம்

உ௲. பாதிமதிசூழ்மலையைத் துருவனுக்குக்கொடுத்தோம்
பாமர்திரிகூடமலை பழையமலையம்மே

வசந்தவல்லிக்குறத்தியை-நாட்டுவளமும்-நகர்வளமும்-வினவுதல்

விருத்தம்,

கேட்டுவளமுனுகாட்டுங்கொடியின்வளபிடைகாட்டுங்குறிஞ்சிபூத்த
காட்டுவளங்குழல்காட்டுமலைவளந்தானீயுரைத்துக்காட்டுவானேன்
தோட்டுவளம்புரிகாதர்திரிகூடமலைவளருந்தோகையேயுன்
னுட்டுவளமெனக்குரைத்துகுற்றாலத்தலவளமுநவிலுவாயே,

குறத்தி-சொல்லுதல்,

இ-ம்-கேதாரகௌளம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

க. சூரமாங்குயிற்சின்னங்காமத்துரைவந்தான்றுரைவந்தானென்றூத
ஆரமாமுலைமின்னாரவாவரல்சுற்றேர்களலங்காரஞ்செய்யப்
பாரமாமதிவெண்குடைமிஞ்சப்பாக்குங்கிள்ளைப்பரிகள்மின்கொஞ்
சத்தேரினமாரன்வசந்தனுலாவுந்திருக்குற்றாலர்தென்னாரியநாடே

உ. கரைசேர்த்தகுழலார்க்கு நாணிக்கடலைச்சேர்ந்தகறுப்பான்மேகம்
சேர்ந்தமுலைக்கிணையாகுமலையைச்சேர்ந்துடலையொன்றுவாங்கி
நீரைச்சார்ந்தாரையம்பொடுசிலைக்கொண்டவின்றேறிவெய்யோன்
றேரைச்சூழ்ந்திடக்கார்காலம்வெல்லுதிருகுற்றாலர்தென்னாரியநாடே.

௩. கூழைவாசற்பலாவினிற்பாயக்கொழும்பலாக்கனிவாழையிற்சாய
வாழைசாய்ந்தொருதாழையிற்றாக்கவருவிருந்துக்குபசரிப்பார்போல்
தாழைசோறிடதாழைகுடுத்திடுஞ்சந்திரசூடர்தென்னாரியநாடே.

௪. அன்னலார்மொழிதன்னைப்பழித்ததென்றுடவர் மண்ணின்மூடுங்
கரும்பு, துன்னியமீளர்ந்துமடந்தையர்தோளைவென்றுசுடகமுத்தியன்
றுபின்னுமங்கவர்முரலைவென்றுபிசியுங்காலத்திற்பெண்மையைவெல்ல
கன்னல்வேளுக்குவில்லாக வோங்குநகடவுளாரியநாடெங்கணுமே

௫. தக்கபூமிக்குமுன்புள்ளநாடு சகலதேவர்க்குமன்புள்ளநாடு
முக்கணனைவிளையாடியநாடு மூவர்பாடிபுகழ்ந்திட்டநாடு
திக்கெல்லாம்வளர்ந்தோங்கியநாடு சிவத்துரோகமுநீங்கியநாடு
மைகண்ணாள்குழல்வாய்மொழிபாகர்வசந்தவாரியநாடெங்கணுமே

௬. அஞ்சுநூறுமமங்கண்டநாடு அனேகங்கோடியுகங்கண்டநாடு
கஞ்சயோனிபுதிக்கின்றநாடு கமலவாணிதுதிக்கின்றநாடு
செஞ்சொன்மாமுனியேகியநாடு செங்கண்மாலசிவனுகியநாடு
வஞ்சிபாததிரிகூடநாதா வசந்தவாரியநாடெங்கணுமே

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106

௭. மாதமூன் றுமழையுள்ளநாடு வருஷமூன் றுவிளைவுள்ளநாடு
வேதமூன் றும்பலிவுள்ளநாடு விசேஷமூன் றுங் கலாவுள்ளநாடு
போதமூன் றுநவஞ்செய்யுநாடு புவனமூன் றுமவலஞ்செயுநாடு
நாதமூன் றுவாழ குற்றாலர் தாரியநாடெங்கணாடே.

௮. நீங்கக்காண்பதுசேர்ந்தவர்பாவம் நெருங்கக்காண்பது கன்னலிற் நொக்-நெல்-தூங்கக்காண்பது செம்பழக்கொத்து-சுழலக்காண்பது திக் கயிமத்து-வீங்கக்காண்பது மங்கையர்கொங்கைவெடிக்கக் காண்பது சொல்லையின்முல்லை - ஏங்கக்காண்பது மங்கலபேரிகை யிசாசரிய நா டெங்கணாடே.

௯. ஓடக்காண்பதுபூம்புனல்வெள்ளம் ஒடுங்கக்காண்பது யோகியருள் ளம்-வாடக்காண்பதுமின்னார் மருங்குலவருந்தக்காண்பது கூழுவிளச்ச க்குபோடக்காண்பது பூமியிலழிந்து புலம்பக்காண்பது கிணகிணிக் கொத்து-தேடக்காண்பது நல்லறக்கீர்த்திதிருக்குற்றாலர் தென்னாரிய ணாடே.

குறத்தி-தலமகிமைசொல்லுதல்

விருத்தம்.

அரிகூடவயன்கூடமறைகூடதினந்தேடவரியாய்நின்ற
திரிகூடப்பதியிருக்குந் திருநாட்டுவளமனைக்கதலிட்டாதம்மே
கரிகூடப்பிடிகிரியுஞ் சாரலிலேயொருவேடன் கைவில்லேந்தி
நரிகூடக்கைலைசென்றதிரிகூடத்தலைமகிமைநவிலக்கேளே.

இ-ம-பிலகரி-தாளம்-ஜமபை

கண்ணிகள்.

௧. ஞானி ருமறியார்கள்சித்ரநதிமூல
நானறிந்தவகைகளிது சொல்லக்கேளம்மே
மேன்மைபெருந்திரிகூடத்தேனருவித்துறைக்கே
மேவுமொருசிவலிங்கத்தேவரகசியமாய்
ஆனதனையயனுமுராரிதானுமறியாமல்
அருந்தவத்துக்காய்த்தேடித்திரிந்தலையுங்காலம்
மேலானவானவர்க்கெங்கள்கானவர்கள்காட்டு
மூலகங்கையாறுசிவமாதுகங்கையாராரே.

௨. சிவமதுகங்கையின்மகிமைபுவனமெங்கும்புகழும்
செண்பகாடவித்துறையின்பண்புசொல்லக்கேளாய்
தவமுனிவர்கூட்டுறவும்வரிக்குந்திசையுஞ்
சஞ்சீவிமுதலானவிஞ்சைமூலிகையும்
கவனசித்தர்தியருமெளனயோகியருங்
காத்திருக்குங்கயிலாயமேற்பிருக்குதம்மே
நவநிதியும்விளையுமிடமவிடமதுகண்டால
நங்கைமார்குரவையொலிமிகுந்தமாகடலே

௫. பொங்குகடல்திரிவேணிசங்கமெனச்செழிக்கும்
பொருந்துவசிட்டநதித்துறையிற்பொன்னுமுத்துங்கொழிக்கும்
சங்கையென்றவடவருவிதங்குந்திரசாபம்
கலந்தாடக்கழிநோய்த்தொலைந்தோடும்பாதம்
சங்கைவீதியிற்பறந்துசங்கினங்கள்மேவும்
தழைத்தமதியிற்சிகரமெங்குங்கொழுத்தகயல்பாயும்
கொங்கலர்செண்பகசோலைசூழும்பலவாவிசார்
குற்றாலத்திரிகூடத்தலமெங்கள்தலமே
௬. மன்றுதனிற்றெய்வமுறச்சென்றுமேன்முழங்கும்
வளமைபெறுஞ்சதுர்யுகம்பகிமையெனவழங்கும்
ஈன்றமதகரிபூசையன்றுசெல்தலமே
இந்தசெய்யுட்பதந்தன்வந்தனைசெய்தலமே
பன்றியொருவேடன்வலஞ்சென்றடித்தத்தலமே
பற்றுகப்பாமருவுறகுற்றாலத்தலமே
வென்றிபெருந்தேவர்களுந்துன்றலாய்மரமாய்
மிருகமதாய்த்தவசிருக்குமபெரியதலமம்மே,

வசந்தவல்லி - கிளைவினவுதல்

விருத்தம்

தீர்த்தவிசேடமுந்தலத்தின்சிறந்த விசேடமுமுரைத்தாய்திருக்குற்றால
மூர்த்திவிசேடந்தனையுமொழிதோறுமீயுரைத்தமுறையாற்கண்டேன்
வார்த்தைவிசேடங்கள்கற்றமலைக்குறவஞ்சிக் கொடியேவருக்கைவாசு
கீர்த்திவிசேடமுமபெரியகிளைவிசேடத்தையுங்கிளர்த்துவாயே-

குறத்தி-சொல்லுதல்-

இ-ம்-முகாரி-ஏகதாளம்.

கண்ணிகள்.

௧, குற்றாலக்கிளைகள்ளதக்கூறக்கேளம்மே
குலமைபார்க்கிற்சேரியிலும்பெரிதுசொல்லண்டாய்
பெற்றதாய்தந்தைதனையுந்துறீகேட்கில்
பெண்கொடுத்தமலையரசன்றனைக்கேட்கவேண்டும்
உற்றதொருபணிமலையின்கொற்றவர்தனுக்கும்
உமாமதுரைமாறனுக்குஞ்செய்மருகர்கண்டாய்
வெற்றிபெரும்பாற்கடலிற்புற்றரவினுறங்கும்
வித்தகர்க்குக்கண்ணுமைத்துனர்காணம்மே
௨. ஆனைவாகனத்தாற்றுயவனுக்கிளிருக்கும்
ஆகுவாகனத்தார்க்குநாகைவாகனருக்கும்
தானையாற்றுக்கொலெதிந்தமகனுற்கு
தருகாழிமகனுக்குந்தமப்பனுக்கண்டாய்
சேனைமசபதிவாசலானைபெறுமபிடிக்குந்
தேனின்றமலைச்சாரலானின்றகொடிக்குந்

கானமலர்மேலிருக்குமோனவ்வயனுர்க்குங்
காமனுர்தமக்குமிவர்மாமனுரம்மே
௯. பொன்னுலகிற்தேவருக்குமன்னுலகத்தவர்க்கும்
பூதலத்தின்முனிவருக்குமபாதலத்துள்ளார்க்கும்
அன்னவடிவெடுத்தவர்க்குமேனவுருவானவற்கும்
அல்லார்க்குமுனனுதித்த செல்வர்காணம்மே
முன்னுதிதநுவந்தவனைத் தமயனெனவுரைப்பார்
மொழிநதானுமொழிபலாம்பழுதில்லைகாணம்மே
நன்னகிற்சுற்றாலநாதர்கிளைவளத்தை
நானுரைப்பதரிதலகுதானுரைக்குமம்மே

வசந்தவல்லி-வினுவுதல்

விருத்தம்,

நீர்வளர்பவளமேனிநிமலர்குற்றாலநாதர்
சூர்வளம்பாடியாடுங்குறவஞ்சிகொடியேகேளாய்
கார்வளர்குழலார்க்கெல்லாங்கருதிசீவிருதாய்ச்சொல்லும்
சீர்வளர்குறியின்மார்க்கத்தெரியவேசெப்புவாயே

குறத்தி-சொல்லுதல்-

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி

வித்தாரமென்குறியம்மே-மணி

அநுபல்லவி,

முத்தாரம்பூணிமுகிழ்முலைப்பெண்ணே
வித்தாரமென்குறியம்மே

சரணங்கள்.

க- வஞ்சிமலையொடு கொஞ்சி கொங்கு
மக்காடந்துலுக்கணே மெச்சி
செஞ்சிவடகாசி நீளம் சீனஞ்
சிங்களமீழம் கொழம்புவங்காளம்
தஞ்சைசிராப்பள்ளிக் கோட்டை தமிழ்ச்
சங்கமதுரைதென் மங்கலப்பேட்டை திசை
மிஞ்சிகுறிசொல்லிப் போராய் திசை
வெனறுதான்பெற்றவிருதுகள்பாராய் (விதிதார)
உ- நன்னகர்க்குற்றாலந்தன்னில் (எங்கும்)
நாட்டுமெண்ணூற்றெண்பத்தோழாணடுதன்னில்
பன்னகமாமுனி போற்றத்த மிழ்ப்
பாண்டியனுழுதற்சிற்றேடுமேபந்த
தென்னருஞ்சித்ர சபையை எங்கு
சின்னணஞ்சாதேவன்செப்போடுமேய்ந்த

முன்னாளிலேகுறி சொல்லிப் பெற்ற
மோகனமாலையார்மோகன வல்லி (வித்தார)
௩, அங்காய்வடகுணை பாவில் கொல்லத்
தாண்டொருகோநூற்றிருபத்து நாவில்
தென்காசியாலய மேகங்கக் குழி
செண்பகமாறற்குச்சொன்னபேர் நாங்கள்
ஈண்பாண்டியராச்சிய மூய்ய சொக்க
நாயகர்வந்தமணக்கோலஞ் செய்ய
இன்பமதுரைமீ னாட்சி அன்று
யெங்களைக்கேட்டதுஞ்சங்கத்தார் சாட்சி (வித்தார)

வசந்த வல்லி-குறிகேட்குதல்,

விருத்தம்,

கல்விக்குவிழிவாள்கொண்டு காமனைச்சிங்கிகொள்வாய்
குலவித்தைக்குறியேபாறற் குறவஞ்சிகுறைவைப்பாயோ
பலவுக்குள்கனியாய்நின்ற பாமர்குற்றாலநாட்டில்
இலவுக்குஞ்சிவந்தவாயா லெனக்கொருகுறிசொல்வாயே,

குறத்தி-சொல்லல்-இ-ம்-அடாணா-ஆதிதாளம்;

கண்ணிகள்,

௧. என்னகுறியாகிலுநான்சொல்லுவே னம்மே சது
ரோறுமேனெதிர்த்தபேரைவெல்லுவே னம்மே
௨, மன்னியர்கள்மெச்சுங்குறவஞ்சிநா னம்மே என்றன்
வயிற்றுக்கித்தனைபோதங்கஞ்சிவா ரம்மே
௩, பின்னமின்றிக்கூழானாலுங்கொண்டுவா வம்மேவந்தால்
பெரியசுளைக்குடுக்கைமட்டுமுண்ணுவே னம்மே
௪, தின்னவிலையும்பிளவுமள்ளித்தா வம்மே, கப்பல்
சீனச்சாக்குந்தூக்கிணிள்ளித்தா வம்மே
௫, அம்மேயம்மேசொல்லவாராய்வெள்ளச்சி யம்மே-உனக்
காக்கம்வருகுதுபாராய்வெள்ளிச்சி யம்மே
௬, விம்முமுலைக்கன்னிசொன்னபேச்சுநன் றம்மே-நேரே
மேற்புறத்திலாந்தையிட்டவீச்சுநன் றம்மே
௭, தும்மலுங்காகமுமிடஞ்சொல்லுதே யம்மே-சாம
சூட்சமாகப்பூரணத்தைவெல்லுதே யம்மே
௮, செம்மையினுநன்னிமித்தங்கண்டுபா ரம்மே-திரி
கூடமலைத்தெய்வமுனக்குண்டுபா ரம்மே

இதுவும்-குறத்திசொல்லுதல்,

விருத்தம்,

பல்லியும்பலபலென்னப் பகருதுதிரிகூடத்திற்
கல்விமான்சிவப்பின்மிக்கான் கழுத்தின்மேன்மருவுமுள்ளான்
நல்லமேற்குலத்தானிந்த நன்னுகர்த்தலத்தானுக
வல்லியேயுனக்குநல்ல மாப்பிள்ளைவருவானம்மே

இதுவுங்-குறத்சொல்லுவது,

ஸ்ரீராகம்-அடதாளசாப்பு,

கண்ணிகள்,

க, நாமெழுகுகோலமிடுமுறைபெறவேகணபதிவையம்மே-குடதாங்காமுப்பழம்படைப்பாய்தேங்காயுமுடைத்துவைப்பாயம்மே

உ, அறுகுபுனல்விளக்குடுவாயடைக்காயவெள்ளிலை கெடுவாயம்மே வடை-அப்பமவல்வர்க்கவகைவைப்பெறிவையம்மே

ஙு, நிறைநாழியளந்துவைப்பாயிறையோனைக் காங்குவிப்பாயம்மேகுறிவரத்தைத்தேர்ந்துகொள்வாய்குலதெய்வத்தைநேர்ந்துகொளவாயம்மே

ச, குறிசொல்லவா குறிசொல்லவாயிறைநுதலே குறிசொல்லவாவம் மேஐயர் - குறுமபலவர்திருவுளத்தாற்பெரும்பலனுங் குறிசொல்லவாவம்மே

குறத்திசொல்லுதல்-கட்டளைக்கலித்துறை

ஆனேறுசெல்வந்திரிகூடநாதரணிநகர்வாழ்
மானேவசந்தப்பசுங்கொடியேவந்தவேளைநன்றே
தானேயிருந்தலமுநன்றேசெழுந்தாமரைப்போற்
கானெறுகைம்மலர்காட்டாய்மனக்குறிகட்டுகற்கே

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்-கண்ணிகள்

க, மூத்திரைமோதிரமிட்டகையைக்காட்டாயம்மே
முன்னைமுதாரியிட்டகையைக்காட்டாய்

உ. அஸ்தகடகம்புனைந்தகையைக்காட்டாய்-பொன்னி
னலங்காரநெளியிட்டகையைக்காட்டாய்

ஙு, சித்திரச்சூடகமிட்டகையைக்காட்டாய்-பசுஞ்
செங்கைமலர்ச்சங்கரேகைகையைக்காட்டாய்

ச, சத்திபீடத்திறைவர்நனனர்க்குள்ளே-வந்த
சஞ்சீவியேயுனதுகையைக்காட்டாய்

கொச்சகக்கலிப்பா.

ஏழைபங்கர்செங்கைமழுவேற்றவாகுற்றாலர்வெற்பில்
வாழிகொண்டமோகவந்தவல்லிகைப்பார்த்து
விழிகொண்டுசெங்கனிவாய்மிக்ககுறவஞ்சிபழங்
கூழையுண்டவாயாற்குறியைமீண்டுசொல்வாளோ

குறத்திசொல்லுதல்-இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

கண்ணிகள்,

க, மாறுமலிருநிலத்தி லறம்வளர்க்குங்கையே
மனையறத்தாலறம்பெருக்கித் திறம்வளர்க்குங்கையே

உ. வீறுசநவநிதியம் விளையுமிந்தக்கையே
மேன்மேலும்பாலமுத மளையுமிந்தக்கையே

ங. ஆறுதசனங்கள்பசி யாற்றுமிந்தக்கையே
அணங்கனையார்வணங்கிநிதம் போற்றுமிந்தக்கையே

ச. பேறுசநன்னகரங் காக்குமிந்தக்கையே
பிறவாதநெறிதார்க்கே யேறருமிந்தக்கையே

குறத்திதெய்வம்பரவல்.

விருத்தம்.

கைக்குறிபார்க்கிலிந்தக் கைப்பிடிப்பவர்தாமெட்டுத்
திக்குமேயுடையராவர் ஜெகமகராசியே
இக்குறிபொய்யாதென்றே யிறையவர்திரிகூடத்தில்
மெய்க்குறவஞ்சிதெய்வம் வியப்புறவணங்குவாளே

ஆசிரியப்பா.

குழல்மொழியுதித்தார்குறும்பலாவுடையார்
அழகசந்நிதிவாழ்பலவிநாயகா
செந்தில்வாழ்முருகாசெங்கண்மால்மருகா
கந்தனேயிலஞ்சிக்கடவுளேசரணம்
புள்ளிமானீன்றபூவையேகுறக்குல
வள்ளிநாயகியேவந்தெனக்குதவாய்
அப்பனேமேலைவாசலிலரசே
செப்பருமலைமேற்றெய்வகன்னியர்கள்
ஆரியங்காவாவருட்சொரிமுதமே
சேரியகுளத்தூர்நின்றசேவகனே
கோலமாகாளிகுற்றாலநங்காய்
காலவைரவாகன்துடிகறுப்பா
முன்னடிமுருகாவன்னியராயா
மன்னியபுலிபோல்வரும்பன்றிமாடா
எக்காலதேவிதுர்க்கைபிடாரி
யிக்கதோர்குறியாய்வேண்டினனுங்களை
வந்துமுனிருந்துவசந்தமோகினிப்பெண்
சிந்தையில்நினைத்ததுசிவனோபொன்னோ
சலவையோபட்டோதவசதானியமா

கலவையோபுழுகோகளபகஸ்தூரியோ
வட்டிலோசெம்பொவயிரமோமுததோ
கட்டிலோமெத்தையோகட்டிவிராகனோ
வைரப்பொடுசெப்போவரத்தொடுசெலவே
கைப்படுதிரவியங்களவுபோனதுவோ
மருவிலாப்பெணமயல்வந்திருஷ்டிதோஷமோ
திரிகண்ணரானவர்செய்தகைமயக்கமோ
மன்னர்தாமிவள்மேல்மயலசொல்லிவிட்டதோ
கன்னிதானென்றவர்மேற்காமித்தகுறியோ
சேலையுடவளையுஞ்சிந்தினதியக்கமோ
பாலையுமணமும்வரப்பெருங்குறியோ
இத்தனைகுறிகளிலிவள்குறியிதுவென
வைத்தோர்குறியைவகுத்தருள்வீரே.

குறத்திசொல்-விருத்தம்.

கடித்திடுமரவம்பூண்டகருத்தர்குற்றாலர்நேசம்
பிடிக்குதுகருத்துநன்றாய்ப்பேசுதுச்சக்கிரேகவி
துடிக்குதென்னுடநாவுஞ்சொல்லென்றுவாயில்
இடிக்குதுகுறளியம்மேயினிக்குறிசொல்லக்கேளே

குறத்திசொல்லுதல்-இ-ம்-பிலஹரி-சாப்புதாளம்,

கண்ணிகள்.

க; சொல்லக்கேளாய்குறிசொல்லக்கேளாய-யம்மே
தோகையர்க்கரசேகுறிசொல்லக்கேளாய்

உ. முல்லைப்பூங்குழலாளே நன்னகரில்வாழ்-முத்து
மோகனப்பசுங்கிளியேசொல்லக்கேளாய்

ங. பல்லக்கேறுங்கெருவிலானேநடத்தி-மணிப்
பணியாபரணம்பூண்டபார்த்திபன்வந்தான்

ச. செல்வப்பூங்கோலத்தையேநீக்கடிக்கையிலவன்
சேனைகண்டவெருட்சிபோல்காணுதேயம்மே

வசந்தவல்லிசொல்லுதல் இ-ம-பந்துவராளி-நாளம்-திரிபுடதாளம்

கண்ணிகள்,

க. கன்னுகன்றுகுறவஞ்சிநாடகக்காரி-இந்த
நாட்டானபேர்க்கானவார்த்தைதானறியேனோ

உ. ஒன்றுகேட்டாகேகுறிசொல்லியேவந்தாய்-பின்னே
புழுப்பிப்போட்டாய்குறியுங்குழப்பிப்போட்டாய்

ங. மன்றில்வருஞ்சேனைதன்னைக்கண்டுபயந்தால்-இந்த
மையலுங்கிறுகிறுப்புந்தையலார்க்குண்டோ

௪. இன்றுவரையேகுளிருங்காய்ச்சலுண்டோ-பின்னை
யெந்தவகையென்றுகுறிகண்டுசொல்லடி

குறத்திசொல்லுதல்

கண்ணிகள்.

௧. வாகத்திலேறிவரும்யோகபுருஷன்-அவன்
வங்காரப்பவனியாசைபெண்களுக்குள்ளே

௨. தோகைநீயவனைக்கண்டுமோகிததாயம்மே-அது
சொல்லப்பயந்தேயிருந்தேன்சொல்லுவேன்முன்னே

௩. காகமணுகாதிரிகூடமலைக்கே-உன்மேல்
காய்ச்சலலலகாய்ச்சலல்லகாமக்காய்ச்சல்காண்

௪. யோகினியேயுன்னுடற்கிறுகிறுப்பெல்லாம்
மோகக்கிறுகிறுப்படிமோகனக்கள்ளி

வசந்தவல்லிசொல்லுதல்

கண்ணிகள்.

௧. கன்னியென்றுநாளிருக்கநன்னகர்க்குள்ளே
காமியென்றாய்குறவஞ்சிவாய்மதியாமல்

௨. சன்னையாகச்சொன்னேன்குறிசாதிப்பையானால்-அவன்
தாருஞ்சொல்லிப்பேருஞ்சொல்லியூருஞ்சொல்லடி

குறத்திசொல்லுதல்

கண்ணிகள்.

௧. உன்னைப்போலெனக்கவனறிமுகமோ
ஊரும்பேருஞ்சொல்வதுங்குறிமுகமோ

௨. பின்னையுங்காணுனக்காகச்சொல்லுவேனம்மே
பெணசேரவல்லவன்காண்பெணகட்கரசே

வசந்தவல்லிசொல்லுதல்.

கண்ணிகள்.

௧. வண்மையோவாய்மதமோவித்தைமதமோ-என்றன்
மதியாமல்பெண்சேரவல்லவனென்றாய்

௨. கண்மயக்காமல்மயக்காதேயுண்மைசொல்லடி
கானமலைக்குறவஞ்சிக்கன்னிமயிலே

குறத்திசொல்லுதல்

கண்ணிகள்.

௧. பெண்ணாசேபெண்ணென்றால்திரியுமொக்கு-மொரு
பெண்ணுடனேசேரவென்றால்கூடவுமொக்கும்
௨, திண்ணமாகவல்லவனும்காதனுமொக்கும் பேரைத்
திரிகூடநாதனென்றேசெப்பலாமம்மே

கலிகூற்று.

மன்னர்திரிகூடநாதனென்னும்போதிலே.மூகம்
மாணிக்கவசந்தவல்லிநாணிக்கவிழ்ந்தாள்

குறத்திசொல்லுதல்

கண்ணிகள்.

௧. நன்னகரிலீசருன்னைமேவவேவாரார்-இந்த
நாணமெல்லாம்நாளைநாளும்காணவேபோறேன்
௨. கைகொடியிற்பொன்னிகழிமாலைவருஞ்சா-ணினி
கக்கத்திலிடுக்குவாயுன்வெட்கத்தையும்மே
௩. என்னுமொருகுறவஞ்சிதனையழைத்தே-அரு
கிட்டுசெருவாபரணம்பூட்டினாளே

சிங்கன்வருதல்-விருத்தம்.

பாமாலைதிரிகூடப்பரமனருள்பெறவசந்தப்பாவைகூர்ந்தம்
பூமாலையிதழிபெறப்பொன்மாலை மணிமாலைபொலிவாய்ப் பூண்டு
நாமாலைக்குறவஞ்சிநன்னகர்பட்டணமுழுதும்நடக்குநாளில்
மாமாலைபூண்டசிங்கன்வணங்கச் சிங்கியைததேடிவருகின்றானே

இதுவுமது-விருத்தம்.

வக்காவின்மணிபூண்டுகொக்கிறகுசிகைமுடித்துவரித்தோற்கச்சை
தொக்காகவரிந்திறுக்கிதொடர்புலிவைபக்கண்டுறுக்கித்தூணிதூங்கிக்
கைக்கானவாயுதங்கள்கொண்டுசில்லிக்கோலெடுத்துக்கண்ணிசேர்த்து
திங்கடங்காக்குளுவசிங்கன் குற்றாலத்திரிகூடச்சிங்கன்வந்தான்.

இதுவுமது-விருத்தம்.

வக்காவின்மணிசூடிவகைக்காரிசிங்கிவரும்வழியைத்தேடி
மிக்கானபுலிகாடிகிடுகிடெனநடுநடுங்கவெறித்துநோக்கிக்
கக்காவென்றேலமிடுங்குருவிகொக்குக் கேறகண்ணிகையில் வாங்கி
தொக்காகநடைநடத்துதிரிகூடமலைக்குறவன்தோன்றினானே

இராகம்-அடாணா-சாப்புதாளம்-கண்ணிகள்.

கொக்கிறகுசூடிக்கொண்டுகுருவிவேட்டையாடிக்கொண்டு
வக்காவினமணிபூட்டிக்கொண்டுமடவார்கண்ணைபோலீட்டிக்கொண்டு

தோக்காய்கச்சையிறுக்கிக்கொண்டுதுள்ளுமீசைமுறுக்கிக்கொண்டு
திக்கடங்காக்குளுவசிங்கன் திரிகூடச்சிங்கன்வந்தான்

சிங்கன்சொல்லுதல்

விருத்தம்.

ஆளிபோற்பறந்தகுரும்பிசைகேட்குந்திரிகூடத்தமலர்நாட்டில்
வேளைதோறும்புகுந்துதிருவிளையாட்டாங்கண்ணிருத்தி வேட்டையா
டி. ஞாளிபோற்சுவடெடுத்ததுப் பூனைபோலொளிபோட்டுநரிபோற்பம்
மிக,கூளிபோற்றொடர்ந்தடிக்குந்திரிகூடப்பெரியசிங்கக்குளுவனானே

இ-ம்-தன்னியாசி-ஆதிதாளம்-கண்ணிகள்.

க. தெருக்கறியார்மூவரிற்பெரியார் சித்திரச்சபையார்சித்திரநதிசூழ்
கோவிலிற்புறவில்காவலிலடங்காக்குருவிகள்படுக்குங்குளுவனு
நானே.

உ. காதஞ்செழுத்தாற்போதிறணியார் வைந்நரப்பெடுத்துக் கின்னரந்
தொடுத்துப்பாடகர்தோலால பலதவிலடித்தும்-பறவைகள் படுக்
குங் குறவனும்நானே.

ங. தலைதனிற்பிறையார்பலவினிலுறைவார் தாளிணைவணங்காச்சிலை
தனைப்பிடித்தே-பலமயிர்நறுக்கிச் சிலகண்ணியிறுக்கிப் பறவை
கள்படுக்குங் குளுவனும்நானே,

ச. ஒருகுழைச்சங்கம்ஒருகுழைத்தங்கம் உரியவிநோதர்திரிகூடநாதர்
திருநாமம்போற்றிதிருநீறுசாத்தி திரிகூடநாமச்சிங்கனும்நானே

நூவன்வருதல்.

விருத்தம்.

புலியொடுபுலியைத்தாக்கிப் போர்மதயானைசாய்க்கும்
வலியவர்திரிகூடத்தில் மதப்புலிசிங்கன்முன்னே
கலிகளுங்கதைகயும்பேசிக் கையிலேயீட்டிவாங்கி
எலிகளைத்துறத்தும்வீர நீப்புலிநூவன்வந்தான்.

இ-ம்-அடாணா-சாப்புதாளம்.
கண்ணிகள்.

க. ஊர்க்குருவிக்குக் கண்ணியுங்கொண்டு உள்ளான்படுத்தது மெண்
ணெண்ணிக்கொண்டு-மார்க்கமெல்லாபலபேசிக்கொண்டு கோட்
கார நூவனும்வந்தான்.

உ. கரிக்குருவிக்குக்கண்ணியுங்கொண்டு காணங்கோழிக்குப் பொரியுங்
கொண்டு-வரிசிலைக்குளுவரிற்கவுண்டன் வாய்ப்பர்ண நூவனும்வந்
தானே.

ங. ஏகனைநாகனைக்கத்திக்கொண்டுஎலியானைபுலியானை யேவிக்கொண்டு
வாகைசிங்கனைமேவிக்கொண்டுவங்கார நூவனும்வந்தானே.

௪. கொட்டைகைத்தூண்போலக்காலிலிலங்க ஒட்டகம்போலேமேலிலங்க கட்டான திரிகூடச்சிங்கன்மட்டியாயனும்நானே.

சிங்கன் பட்சிகளைப்பார்த்தல்.

விருத்தம்.

மூவகைமகிழுஞ்சாய மூரலால்வீரஞ்செய்த
சேவகர்திருக்குற்றாலர் திருவிளையாட்டங்கன்னில்
பாவகமாகநூவன பறவைவம்பாற்பறவைகூவி
மாவின்மேறிச்சிங்கன் வரும்பட்சிபார்க்கின்றானே

தரு-இ-ம-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி,

வருகினுமையே-பறவைகள்-வருகினுமையே

அநுபல்லவி.

வருகினுமையே திரிகூடநாயகர்
வாட்டமில்லாப்பண்ணைப்பாட்டப்புறவெல்லாம்
குருகுநாரையுமன்னமுந்தாராவும்
கூடைக்கிடக்களுஞ்செங்காலநாரையும் (வருகினு)

சரணங்கள்.

௧. சென்னியிலேபுனற்கன்னியைவைத்த
திரிகூடநாதர்கிரிமாதுவேட்கையில
மன்னனொருவன்வரிசையிட்டான்கங்கை
மங்கைக்குநானும்வரிசைசெய்வேனென
அன்னதயவுடைபாகாசகங்கை
யடுக்களைக்காணப்புறப்படுசேத்திபோல்
பொன்னிறவானெங்குந்தன்னிறமாகப்
புரிந்துபுவனந்திரிந்துதிருகினம் வருகினு

௨, காடைவருகுதுகம்புள்வருகுது
காக்கைவருகுதுகொண்டலாத்தியும்
மாடப்புறாவுமயிலும்வருகுது
மற்றொருசாரியாய்க்கொக்குத்திரளெல்லாம்
கூடலையுள்ளாக்கிச்சைவம்புறம்பாக்கி
கூடுஞ்சமணரைநீடுங்கழுவேற்ற
ஏடெதிரேற்றியசம்பந்தமூர்த்திகள்
இட்டதிருமுத்தின்பந்தல்வந்தாற்போலே (வருகினு)

௩, வெள்ளைப்புறாவுஞ்சகோரமுமாங்கையும்
மீன்கொத்திப்புள்ளுஞ்சாரங்கொத்திப்பட்சியும்
கிள்ளையும்பஞ்சவர்ணக்கிளிகூட்டமுங்
கேகயப்பட்சியுநாகணவாய்ச்சியும்

உள்ளானுஞ்சிட்டுவெளியானுமன்றிலும்
ஓலஞ்செய்தேகூடிநாலைஞ்சுதோற்றமாய்
துள்ளாடுஞ்சூலகபாலர்பிராட்டியார்
தொட்டாடுமைவர்ணப்பட்டாடைபோலவே. (வ[illegible]கினு)

சிங்கன்சொல்

கொச்சகக்கலிப்பா.

ஈராயிரங்கரத்தானேற்றசங்குநான்மறையும்
சீராயிரங்கடஞ்செய்தவாகுற்றாலவெற்பில்
பாராய்பலமுகமும் பட்சிநிறைசாயுதையே
ஓராயிரமுகமும்பட்சிநிறைசாயுதையே.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

சாயினுமையே-பறவைகள்-சாயினுமையே

அநுபல்லவி,

சாயினுமையேபாயும்பறவைகள்
சந்தனக்காட்டுக்குஞ்சண்பகக்காவுக்கும்
கோயிற்குழல்வாய் மொழிமங்கைப்பெருக்குங்
குற்றாலநாயகர் சிற்றாற்றுவெள்ளம்போல் (சாயி)

சரணங்கள்.

காராருஞ்செங்குளமேலப்பாட்டுப்பற்றுக்
காடுவெட்டிப்பற்றுநீடுசுண்டைப்பற்று
சீராரும்பேட்டைக்குளப்போடைக்காங்கேயன்
ஸ்ரீகிருஷ்ணன்மேடுமுனிக்குருன்கபேரி
ஏரிவாய்சிவலப்பேரிவடகர்
விராசகுலராமன்கண்டுகொண்டான்மேலை
மாரிப்பற்றுங்கீழைமாரிப்பற்றுஞ்சன
னேரிப்பற்றுஞ்சாத்தனேரிப்பற்றுஞ்சுற்றி (சாயினு)
பாறைக்குளந்தெற்குமேல்வழுதிக்குளம்
பாட்டைப்பெருங்குளஞ்செங்குறிஞ்சிக்குளம்
ஊருணிப்பற்றுந்திருப்பணிநீள
முயர்ந்தபுளியங்குளந்தாவணைக்குளம்
மாறனேரிக்குளமளத்தளம்பாறை
வழிமறித்தான்குளமாலடிபற்றும்
ஆரணிகுற்றாலர்தோட்டச்செய்
அபிஷேகப்பேரிக்கணக்கன்பற்றிலுஞ் (சாயினும்)
று

ROJA MUTHIAH
KOTTAIYUR-630 106

ஐயர்குற்றாலத்துநம்பியார்திருந்து
　மப்பாலொருதாதன்குற்றாலப்பேரி
செய்யும்புலியூரிலஞ்சிமேலாகரஞ்
　செங்கோட்டைகீவலநல்லூர்சிற்றம்பலம்
துய்யகுன்றக்குடிவாழவல்லான்குடி
　சுரண்டையூர்முதலுட்கிடைசுற்றியே
கொய்யமலர்த்தாரிலஞ்சிக்குமா
　குருவிளையாடுக்திருவிளையாட்டத்தில்

சிங்கன்சொல்

கொச்சகக்கலிப்பா.

கொட்டழகுகூத்துடையார்குற்றாலநாதர்வெற்பில்
நெட்டழகுவாள்விழியும்நெற்றியின்மேற்கஸ்தூரிய்
பொட்டழகுங்காத்தழகும்பொன்னழகுமாய்நடந்த
கட்டழகிதன்னழகெண்கண்ணளவுங்கொள்ளாதே.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

மேயினுமையே-பறவைகள்-மேயினுமையே

அநுபல்லவி.

மேயினுமையேகுற்றாலநாதர்வியன்குல சேசரப்படிக்குளங்களும் ஆயிரப்பேரியுந்தென்காசியுஞ்சுற்றி யயிரையுந்தேளியுமாராலுங்கொத்தியே. (மேயினு)

சரணங்கள்.

ஆலயஞ்சூழத்திருப்பணியுங்கட்டி யன்னசத்திரங்கட்டி யப்பாலுந்தென்காசிப், பாலமுங்கட்டிப் படித்தாஞ்சேர்க்கட்டி பத்தசனங்களைக் காக்கத்துசங்கட்டி, மாலயன்போற்றிய குற்றாலநாதர்க்குவழித்தொண்டுசெய்திடக் கச்சைகட்டிக்கொண்ட, சிலன்திருநெல்வயில் சின்னஞ்சேந்திரன் சிறுகாலசந்தி திருத்துப்புறவெல்லாம். (மேயினு)

உ. தானைதலைவன் வயித்தியப்பன்பெற்ற சைவக்கொழுந்து தருமத்துக்காலயஞ் சேனைச்சலரிப்பெருமாள் சகோதரன்செலவன் மருதூர்வயித்தியப்பனுடன் மானவன்குற்றாலநாதனைப்பெற்றவன் வள்ளலெனும் பிச்சைப்பிள்ளைத்திருத்தெல்லாங் கானக்குளத்துள் வாய்கிழைப்புதுக்குளங் கற்பூரக்காற்பற்றுந் தாட்டான்குளஞ்சுற்றும் (மேயினும்)

௩. மன்னன்கிருவையிற்சின்னணஞ்சேந்திரன் வடகரை வீட்டுக்குமந்திரியாகவும் செங்நெல்மருதூர்க்குநாயகமாகவுந்தென்காசியூருக்குத்தாயகமாகவுந்தன்னைவளர்க்கின்ற குற்றாலநாதர்தலத்தைவளர்க்கின்ற தாணிகளுக்கவும் நன்னகர் குற்றாலத்தந்தாதிசொன்னவன்நண்ணுர்தொழும் பிச்சைப்பிள்ளைத் திருத்தெல்லாம். (மேயினு)

௪. நன்னகருர்கட்டிச்சாலைமடங்கட்டி நாயகர் கோவிற்கொலுமண்டபங்கட்டி தென்னமரம்பரமாணக்தத்தோப்பிட்டுத் தெப்பக்குளங்கட்டி

ந்தேர்மண்டபங்கட்டிப் பன்னுந்திரிகூடத்தம்பங்கட்டிப் பசுப்பிரை
கோடித்திருப்பணியுங்கட்டி யங்காளில்தர்மக்களஞ்சியங்கட்டு மனாக
பத்மநாபன் கட்டளைப்பற்றெல்லாம் (மேவினு)
௫-தங்கைமுன்கட்டினவம்பலத்துக்குந் தன்மக்துக்கு நம்பிலைக்கண்ணடி
போலவே சுங்கையார்வாசலிற்பிள்ளையார்செய்வித் திரண்டுகுறிஞ்சி
ப்படித்துறையுஞ்செய்த கொங்கார்புயத்தானிராக்கதப்பெருமாள் குற்
றாலநாதன் முன்னுற்றகோசான் வந்தனைசேர்சங்கு முத்துதன்மைத்
துனன்மன்னன்வயித்தியநாதன திருதசெல்லாம், (மேவினு)
௬-ஊர்மேல்வருகின்றதுன்பமுநீக்கியடங் கார்குறும்புமடக்கியே நன்கா
கியூர்மேலுயர்ந்தமனுநீதிநாட்டியுடையவர் குற்றாலர்பூசைநைவேத்தி
யமதோமேற்றிருநாளுங்கொப்பற்றிருநாளும் சித்திரமணடபஞ்சத்திரச்
சாலையும் பார்மேல்வளஞ் செய்யனந்த பத்மநாபன்பாலனவயித்தியநாத
ன திருக்கெல்லாம், (மேவினு)
௭-ஆறையழண்கப்கபூபாலன்கட்டளையன்பன் திருமலைக்கொழுந்து தன்
கட்டளை நாறம்புகுற்றாலச்சங்குகன்கட்டளை நங்கைநல்லாரிநாயால
ன்கட்டளை வீறுசேர்பால்வண்ணச்சங்கு தன்கட்டளை மிக்கானமேலாம
னூர்கிருஷ்ணன்வணிகேசன் பேருடையன்பன் வருசங்குமுத்து தன்
பேரானகட்டளைச்சிரானபற்றெலாம் (மேவினு)
௮-தாணிகன்சர்க்கரைப் பண்டாரமென்னுந்தணியாதகாதறபணிவிடை
செய்கின்ற மேன்மைபெருஞ்சுங்காங்கோமூன்கட்டளைமிக்ககருணைவப்ப
திராமநாயகன் நானிலமும்புகழ்தாகந்தீர்த் தானுடன்வல்லூர் வருஞ்ச
ங்காமூர்த்திகட்டளை ஆனசடைத்தம்பிரான்பிச்சை கட்டளையப்பால்ம
லைநாட்டார்கட்டளைப்பற்றெலலாம் (மேவினு)

சிங்கன்சொல்-கொச்சகக்கலிப்பா,

செட்டிக்கிரங்கிவினைதீர்த்தவர்குற்றாலர்வெற்பில்
கட்டிக்கிணங்குநறுஞ்சுந்தரியாள் கொங்கையின்மேல்
முட்டிக்கிடக்குங்கொஞ்சிமுத்தாடிக்கூடிநன்றாய்க்,
கட்டிக்கிடக்குமலைக்கச்சாய்க்கிடந்திலனே,

தரு-இம்-கல்யாணி-தாளம்-சாப்பு,

பல்லவி.

கண்ணிகொண்டுவாடா குளுவா கண்ணிகொண்டுவாடா.

அநுபல்லவி.

கண்ணிகொண்டுவாடாபண்ணவர்குற்றாலர்
காரார்திரிகூடச்சாரலிலேவந்து
பண்ணியபுண்ணியமேறின்றாற்போலே
பறவைகளெல்லாம்பறந்தேறிமேயுது (கண்ணி)

சரணங்கள்,

மானவர்சூழுமதுரையிற்பாண்டியன்
மந்திரியார்கையின்முந்திப்பணம்போட்டுத்

தானாசைப்பட்டுமுன்கொண்டகொக்கெல்லாந்
  தரிகொண்டதில்லைநரிகொண்டுபோச்சுது
காணவர்வேடத்தையீனமென்றெண்ணாதே
  காக்கைப்படுத்தகருமுகில்வண்ணனும்
மேனாட்படுத்திட்டகொக்கிதின்னும்
  விடைமேலிருப்பார்சடைமேலிருக்குது (கண்ணி)
முன்னாள்படுத்தபழம்பெருச்சாளியை
  மூத்தநயினாரொடுவாய்க்கொடுபோனார்
பின்னானதம்பியாராறுமயிலையும்
  பிள்ளைக்குறும்பாறபிடித்துக்கொண்டேகினார்
பன்னாருமன்னத்தைநன்னகரீசர்
  பரிகலமீந்திடும்பார்ப்பானுக்கீந்தனர்
வன்னப்பருந்தொருகள்வனகொடுபோனான்
  வக்காவுநாரையுங்கொக்குந்தம்படுக்கவே (கண்ணி)
மீறுமிலஞ்சிக்குறத்தியைக்கொண்டசெவ்
  வேட்குறவன்முதல்வேட்டைக்குப்போனநாள்
ஆறுநாட்கூடியொருகொக்குபட்ட
  தகப்பட்டகொக்கையவித்தொருசட்டியில்
சாறுகவைத்தப்பின்வேதபிராமணர்
  தாமுட்கொண்டார்சைவர்தாமுங்கொண்டார்தவப்
பேறுமுனிவருமோற்றுக்கொண்டாரினிப்
  பிக்குச்சொல்லாமலேகொக்குப்படுக்கவே (கண்ணி)

கவிக்கூற்று-கொச்சகக்கலிப்பா.

ஆனைகுத்திச்சாய்த்ததிறலாளர்திருக்குற்றாலா
கூனிகொத்திமுக்கிவிக்கிக்கொக்கிருக்கும்பண்ணையெல்லாம்
சேனைபெற்றவாட்காரச்சிங்கனுக்குக்கண்ணிகொண்டு
பூனைகுத்திநூவன்முழுப்பூனையைப்போல்வந்தானே.

நூவன்-சொல்லுதல்,

இராகம்-காம்போதி-சாப்புதாளம்.

கண்ணிகள்,

கலந்தகண்ணியைநெருக்கிக்குத்தினால்காக்காயும்படுமே குளுவா
  காக்காயும்படுமே
மலர்ந்தகண்ணியைக்கவிழ்த்துக்குத்தினால்வக்காவும்படுமே குளுவா
  வக்காவும்படுமே
உலர்ந்தகண்ணியையிறுக்கிக்குத்தினாலுள்ளானும்படுமே குளுவா
  உள்ளானும்படுமே
குலர்ந்தகண்ணியைத்திருத்திக்குத்தடாகுற்றாலமலைமேல் குளுவா
  குற்றாலமலைமேல்

சிங்கன்சொல்-கொச்சகக்கலிப்பா.

கள்ளுலவுகொன்றையந்தார்கர்த்தர்திரிகூடவெற்பில்
பிள்ளைமதிவாணுதலாள்பேசாதவிறடங்கித்
துள்ளிமடிமேலிருந்துதோளின்மேலேறியவள்
இள்ளிமொழிகேட்கவொருகிள்ளையானேனில்லையே.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்

பல்லவி.

கெம்பாறடையே-பொறுபொறு-கெம்பாறடையே

அநுபல்லவி.

கொம்பாறடையே நம்பர்குற்றாலர்
 கிருபைப்புறவில்பறவைபடுக்கவே
வம்பாகவந்தவுன்சத்தத்தைக்கேட்டல்லோ
 வந்தகுருவிகலேந்தோடிப்போகுது (கெம்பா)

சரணங்கள்.

ஏறுகமீன்களுமேறிவருகுது
 எத்திசைப்பட்டகுருகும்வருகுது
நூறுறுகண்ணியைப்பெருக்கக்குத்தியே
 நூவனுநானுமிருந்தோமுனக்கினி
பேறானகுளேமருந்தாகிலும்பிறர்
 பேசாமல்வாடைப்பொடியாகிலுமரைக்
கூறுகிலுமொருபங்காகிலுமொரு
 கொக்காகிலும்நரிக்கொம்பாகிலுந்தாறேன் (கெம்பா)
பூசியுடுத்துமுடித்துவளையிட்டுப்
 பொட்டிட்டுமையிட்டுபொன்னிட்டுபூவிட்டுக்
காசுபறித்திடும்வேசையராசாரக்
 கண்ணிக்குள்ளேபடுங்காமுகர்போலவும்
ஆசாரவீனத்துலுக்கன்குதிரை
 யடியொட்டுப்பாறையடியொட்டிறற்போலுந்
தேசத்துக்கொக்கெல்லாங்கண்ணிக்குள்ளேவந்து
 சிக்குதுபார்கறிதக்குதுபாரினிக் (கெம்பா)
ஆலாவுங்கொக்குமருகேவருகுது
 ஆசாரக்கள்ளர்போல்காரைதிரிகுது
வேலானகன்னியராசையினுங்கீழு
 மேலுந்திரிந்திடும்வேடிக்கைக்காரர்போல்
காலால்திரிந்துதிரிந்துதிரிந்திதங்கள
 கண்ணிக்குள்ளாகும்பறவையைப்போகட்டு
பாலாறுநெய்யாறுபாய்கின்றவேட்டைதிற்
 பல்லொடிக்கச்சிறுகல்லகப்பட்டாற்போல (கெம்பா)

கவிக்கூற்று

ஆசிரியவிருத்தம்.

தேவிகுழல்வாய்மொழிப்பேர்நாச்சியார்கால் செண்பகக்கால்திரு ந்தமதிசூடினார்கால், காவியல்வெண்மடைதட்டான் பற்றுக்கள்ளிக்கு ளமழகர்பள்ளன்கூற்று, வாவிதொறுநின்று சிங்கன்வேட்டையாடி வ ருவியாற்றுக்கால்வடகால் தென்கால், கோவில்விளையாட்டமெங்குங்க ண்ணிகுத்திக் கூவினூரவனைவிட்டேவினானே.

சிங்கன்-சொல்லுதல்.

இ-ம்-தர்பார்-சாப்புதாளம்.

கண்ணிகள்.

கல்வித்தமிழ்க்குறியார்திரிகூடநாதர்க்கர்த்தர்பெற்றாள்பாவுஞ்
செல்வக்கடலணையான்குற்றாலச்சிவராமநம்பியெங்கோன்
வல்லமணியபட்டன் பெருமைவளர் சங்குமுத்துநம்பி
வெல்லுங்குற் றாலநம்பிபுரமெல்லாம் மீன்கொத்திக்கூட்டமையே.
சீராளன்பிச்சபிள்ளை திருப்பணிசெல்வப் புதுக்குளமும்
காராளன்சங்குமுத்து திருத்தொடைக் காங்கேயன்கட்டளையும்
மாராஜன்தென்குடிகை வைத்தியநாதன் புதுக்குளமும்
தாராளமானபுள்ளும் வெள்ளன்னமுந் தாராவுமேயுதையே
தானக்கணக்குடனேஸ்ரீபாண்டாரந்தன் மடத்தார்கணக்கும்
வானவர்குற்றாலர் திருவாசம்மாடநற்பத்தியமும்
கானிகழ்சூழ்தடிகை வைத்திய நாதனாபாலன்
தானபிமானம்வைத்த சிவமாரன் சம்பிரதிகணக்கும்
வேதநாராயணவேள் குமாரன் விசைத்தொண்டநாடாளன்
சீதான்முத்துமன்னன் விசாரிப்பச் சேர்ந்தபுரவியெல்லாம்
காதலாயக்கண்ணிவைத்து பறவைக்குக் கங்கணங்கட்டிநின்றே
னேதோவொருபறவை தொடர்ந்துவந் தென்னைக்கடிக்குதையோ

சிங்கன் சிங்கியை நினைத்துக்கொள்ளுதல் விருத்தம்.

காவலர்திரிகூடத்திற்காதலாற்கலங்கிவந்த
நூவனைப்பழித்தச்சிங்கனேக்கியேவேட்டைகாட்டி
லாவல்சேர்காமவேட்டையாசையாலன்னப்பேட்டைச்
சேவலபோய்பணைக்கண்டான்சிங்கிமேற்பிறமைகொண்டான்.

சிங்கியை-நினைத்துப்புலம்பல்.

இ-ம்-ஆகிரி-சாபுதாளம்.

எட்டிக்குரலிலொருதரல்கூவும் புறாவேயெ
தேகாந்தச்சிங்கியைக்கூவாததென்ன குலாவே
மட்டார்குழலிதன் சாயலைக்காட்டு மயூரமேயவள்
மார்பிலெழுந்தமுலையையுங்காட்டுப ரமே

தட்டொத்தகும்பத்தடமூலைகாட்டுஞ் சகோரமே சற்றுந்
தண்ணெனறும்வெச்செனறுங்காட்டிவிட்டாலுபாரமே
கட்டிதிரவியங்கண்போலுநன்னகர்க் காகாரமே
கண்டிடமெல்லாமவளாகத்தோற்றுது காவியேகண்ணிற்

சிங்கன்சொல்கொச்சகக்கலிப்பா.

செட்டிபத்திற்கண்ணிவைத்தேனசிங்கிநடைச்சாயலினாற்
பெட்டைகுளத்திலன்னப்பேட்டைநடைபார்த்திருந்தேன்
கட்டுற்றநன்னகர்க்கென கண்ணியெல்லாங்கொற்றிவெற்றிக்
கொட்டிக்கொண்டையேகுருவியெல்லாம்போயினுமே.

தரு-இ-ம்-முகாரி-சாப்புதாளம்.

பல்லவி.

போயினுமையே பறவைகள் போயினுமையே

அநுபல்லவி.

போயினுமையே நாயகர்குற்றாலர்
பொல்லாததக்கன்மதத்தையழித்தநாள்
வாயிவடிபட்டிடிபட்டுதைபட்டு
வானவாதானவர்போனதுபோலவே (போயினு)

சரணங்கள்.

மேடையினின்றொருபஞ்சவர்னக்கிளி
யினனூர்கைதப்பியென்முன்னுகவந்தது
பேடையெனறேயதைச்சேவல்தொடர்ந்தது
பின்னொருசேவலுங்கூடத்தொடர்ந்தது
கூடியவின்பமிரண்டுக்குமெட்டாமற்
சுந்தோபசுந்தரர்வந்தகலாபத்திற்
காடெல்லாம்பட்சியாய்க்கூடியுளம்பாடிக்
கண்ணியுந்தட்டியென்கண்ணிலுங்கூட்டியே (போயி)
ஆயிரங்கொக்குக்கண்ணியைவைத்துநா
னப்பாலேபோயொருமிப்பாயிருக்கையில்
ஆயிரங்காகங்களாயிரம்பட்டு
மறைதவிணைத்துக்கிடப்பதுபோலவே
காயமொடுங்கிக்கிடந்ததுகண்டுநான்
கண்ணிகழற்றிநிலத்திலேவைத்தபின்
சேயிழைதன்பொருட்டாலேபஞ்சாட்சரஞ்
சேவித்தமன்னவன்பாவம்போனாற்போலே (போயி)
தம்பமென்றேநம்பினோரைச்சதிபண்ணித்
தானவாழ்ப்பார்ப்பவர்செல்வங்கள்போலவும்
பம்பம்வடபாலருவியிற்றோய்ந்தவர்
பாவங்க[illegible]ளாய்ப்போவதுபோலவும்

கும்பமுனிக்குச்சிவமானகாலங்
குதித்தோடிப்போனவைணவர்போலவும்
அம்பிகைபாதந்திரிகூடநாத
ரடியவர்மேல்வந்தவன்பம்போனாற்போலே. (போயினு)

நூவன்-சிங்கனைப்பழித்தல்.

விருத்தம்,

வருக்கையார்திரிகூடத்தின்மாமிமேற்கையும்வேலிப்
பருத்திமேற்கண்ணுமானபாவைபோல்வேட்டைபோனாய்
கருத்துவேறானாய்தாயைக்கற்பித்தமகள்போலென்னைச்
சிரித்தனைசிங்காவுன்னைச்சிரித்ததுகாமப்பேயே.

இதுவும்-நூவன்சொல்-விருத்தம்.

கடுக்கையார்திரிகூடத்திற்காமத்தால்வாமக்கள்ளைக்
குடித்தவர்போலேவீழ்ந்தாய்கொக்குநீபடுத்துவாழ்ந்தாய்
அடிக்கொருகினைவேன்சிங்காவாசைப்பேயுனைவிட்டாது
செடிக்கொருவலையும்போட்டுச்சிங்கியைத்தேடுவாயே.

சிங்கன்-நூவனுக்குச்சொல்லுதல்.

விருத்தம்,

வேடுவர்கள்ளரியோர்தான்மெய்யில்லாதவனேயென்னை
யூடவிறசொன்னபேச்சா லுறுவிலிபகைந்தானென்பேர்
போடுவான்புட்பபாணம் புறப்படமாட்டேடநூவா
சேடநீதிரிகூடத்திற்சிங்கியைத்தேடுவாயே.

நூவன்சொல்-விருத்தம்.

அங்கணர்திரிகூடத்தி லவளோநீயணைந்தாலென்ன
நுங்களிற்பிரிந்தாலென்ன நூவனுக்குண்டோநட்டங்
கங்கணமெனக்கேன்சிங்கா காசிலையுனக்குண்டானாற்
கொங்கணச்சிங்கிதன்னைக் கூட்டிவாகாட்டுவேனே.

தலங்கள்தேடிப்போனான்

விருத்தம்.

திருவனையைலைகாஞ்சிதிருக்காளத்தி சீர்காழி சிதம்பரந்தென்னாரூர்
காசி குருநாட்டுக்கோதாரங் கோலகொண்டை கோகரணஞ்ஜெகநாதங்கும்
பகோணம அரியலூர்சீரகத்திருவானைக்காவடங்கலும்போய்ச்சிங்கிதனை
த்தேடிச்சிங்கன் வருசிராப்பள்ளிவிட்டு மதுரைதேடி மதிகொண்டான்
திரிகூட [illegible] மே.
[illegible] துாக் நல்லைநல்லூர் புன்னைக்காவு தேன்திருச்செந்தூர்
குருகூர்ஸ்ரீவைகுந்தநெல்வேலிசிங்கிகுளந்தேவநல்லூர்கிலைதருசிற்றூர்

குமரிதிருவாங்கோடு சொல்லரியகுருங்கைகளக்காடுதேடித்தொண்டை
நாடூர்த்தாழநகல்லூர்தேடிச் செலவருறைசிவசைலம்பாவநாசந் திரி
கூடற்சிங்கிதனைத்தேடினானே.

சிங்கன்-சொல்லுதல்.

இராகம்-நீலாம்புரி-ஆதிதாளம்

கண்ணிகள்.

க. பேடைக்குயிலுக்குக்கண்ணிவைத்துநான் மாடப்புறாவுக்குப் போனேன்மாடப்புறாவுங்குயிலும்படுத்தேன்வேடிக்கைச்சிங்கியைக்காணேன்

உ-கோலமயிலுக்குக்கண்ணியைவைத்து நானாலாப்படுக்கவேபோனேன்; ஆலாவுங்கோலமயிலும்படுத்தேன்மாலான சிங்கியைக்காணேன்

௩.வவ்வாற்பறவையின்வேட்டைக்குப்போய்ச்சாமவெவ்வேட்டைதப்பிவிட்டேன், வவ்வால்படுக்கமறமாயசங்கட்ட வைவோகமாச்சுதுதானே.

௪.இவ்வாறுவர்தவென்னெஞ்சில்விகாரத்தை யெவ்வாறுதீர்த்துக்கொள்வேனே, செவ்வாய்க்கரும்பையநுக வஞ்சியைசிங்கியைக்காண்கிலேனே

குற்றாலத்தில்-சிங்கன்-சிங்கியைத்தேடுதல்

விருத்தம்.

நற்றாலந்தன்னிலுள்ளோர்யாவரேனு நன்னகரத்தலத்திவர்த்து பெறுவார்பேறு, பெற்றார்தானன்னகரத்தலத்தைவிட்டாற் பிரமலோகம்வரைக்கும்பேறுண்டாமோ, வற்றாதவடிவருவிச்சாரீங்கி வடகாசிகுமரிமட்டுமலைந்தசிங்கன், குற்றாலத்தலத்தின்முன்னே தவத்தால்வந்து கூடினான்சிங்கிதனைத்தேடினானே.

சிங்கியைக்காணமற் புலம்பல்.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

சிங்கியைக்காணேன்-என்வங்கணச்-சிங்கியைக்காணேனே.

அநுபல்லவி.

சிங்கியைக்காமப்பசுங்கிளிப்பேடையைச்
சீர்வளர்குற்றாலர்பேர்வளம்பாடிய
சங்கீதவாரியையிங்கிதநாரியைச்
சல்லாபக்காரியையுல்லாசமோகன சிங்கியை

சரணங்கள்.

க. ஆரத்தனத்தைப்படங்கொண்டுமூடி யசைத்துநின்றாளதையா
னேக்கொம்பென்றே- கோரத்தைவைத்தவிழிக்கெதிர்சென்றேன்
கொஞ்சுத்தனத்தையுறிந்துசுகக்காறி - பாரத்தனத்தைத்திறந்து

விட்டான்கண்டு பாவியேனைவிமறந்துவிட்டே னுடன் - நீரக்கனி
யையமயக்கிமயக்கியே சிங்காரமோகனச்சிங்கிகொண்டாளந்த-சி

௨. பூவென்றபோதடா வருடிவருடிப் புளகமுலையைநெருடிநெருடியே
தென்றசொல்லுக்கோரஞ்சனந்தீட்டி யெடுத்துச்சுருளையிதழாலே
கொடுத்தவள்-வாவென்றுலகச்சுருள்தாவென்றுநானுமக்குக்குறிக
ண்டுகக்குறிவைத்தபின்- ஞானவென்றுருக்காலுமுரைப்பளதுக்
கிடந்துகொதிக்குதென்பேய்மனம் சிங்கி

௩. தாரமென்றுன்றிடைத்தையொதுக்கித் தடமார்பிறுகத்தழுவவுங்
காலவன்-வாராயென்கொங்கைக்குச்சந்தனம்பூசாள் மறுத்துநான்
பூசினும்பூசலாகாதென்பள்-சீராடிக்கூடிவிளையாடியிப்படி நீரா
மையல்தந்ததிராண்மைச்சாரிணயக் - காராடுகெண்டார்தென்னாட்டு
றை காரிகைப்பூவையையாரியப்பாவையைச் சிங்கி

குறவன்-வினவுதல்.

கொச்சகக்கலிப்பா.

சங்கமெல்லாமுத்தீனுஞ் சங்கர்திரிகூடவெற்பி
பொங்கமெல்லாஞ்செய்யுமுங்கள் பொங்கமெல்லாய்யர்ரதிவார்
சிங்கமெல்லாமொத்ததாடிச் சிங்காவுன்சிங்கிதனக்
கங்கமெல்லாஞ்சொல்லியடையாளஞ்சொல்வாயே.

தரு-௩-ம்-பியாகடை-மிசுரதாளம்

பல்லவி,

கறுப்பிலழகியடா-காமச்

அநுபல்லவி.

சுறுக்கிலழகிசிங்கி சுகக்காறி கறுப்பி

சரணங்கள்.

௧. கண்களிரண்டுமெம்புக் கணைபோலநீண்டிருக்கும்
கையத்தனையகலங்காணுமடா
பெண்கள்மயக்குமவள் விரகப்பார்வை
சிங்கிபிடித்தாலந்தப் பயலும்பெலப்பானே கறுப்பி

௨. நகையுமுகமுமவள் நாணயக்கைவீச்சும்
பகைவரும்பிரிந்துபார்ப்பாரடா
தொகையாச்சொன்னேனினிச் சொல்லக்கூடாதொரு
வகையாய்வருகுதென்னை மயக்குதையேஐயே கறுப்பி

௩. விடையில்வரும்பவனி யுடையர்திருக்குற்றாலர்
சடையிலிளம்பிறைபோல் தனிநுதலாள்
சடையிலழகுமிரு தொடையிலழகுமவ
ளுடையிலழகுமென்னை யுருக்குதையேஐயே கறுப்பி

கொச்சகக்கலிப்பா.

சாட்டிநிற்குமண்டமெல்லாஞ் சாட்டியில்லாப்பம்பரம்போ
லாட்டுவிக்குங்குற்றாலத் தண்ணலார்கண் ணோட்டில
காட்டுவிக்குமுன் மோசக் கண்மாயச்சிங்கிதனைக்
கூட்டிவைக்கும் பேர்களுக்குக் கூலியென்ன சொல்வாயே.

இராகம்-தர்பார்-ரூபகதாளம்

கண்ணிகள்.

௧- வாடைமருந்துப்பொடியும் அம்பிநூர்
மரப்பாவைபின் தொடரமாயப்பொடியும்

௨-கூடியிருக்கமருந்தும் இருபொழுதும்
கூடியிருப்பார்களைக்கலைக்கமருந்தும

௩-காடுசெட்டக்கிளிக்கட்டு குறளிவித்தை
கண்கட்டுவித்தைகளுங்காட்டித்தருவேன்

௪-வேடிக்கைக்காமரதிபோல் திரிகூட
வெற்பிலுறைசிங்கிதனைக்காட்டாயையே

௫-மலையைக்கரையப்பண்ணுவேன் குமரிகட்கு
வாராதமுலைகளும வரப்பண்ணுவேன்

௬-முலையையொளிக்கப்பண்ணுவேன் ஒளித்தபோனை
மோகினிமந்திரஞ்சொல்லிவரப்பண்ணுவேன்

௭-திலதசிரகஞ்செய்வேன் ஒருவருக்குக்
தெரியாமற்போகவராச்சித்துமறிவேன்

௮-கலகமதனப்படலை வென்மீநிற்கண்
காட்டிவிட்டசிங்கிதனைக்காட்டாயையே

நூவன்-சொல்லுதல்.

கொச்சகக்கலிப்பா.

ஆற்றைநான்கடத்திவிட்டா லாகாசமார்க்கமோடத்
தேற்றநீயறிவாயல்லோ திரிகூடமலையிற்சிங்கா
சாற்றுமுன்மருந்துபோலச் சகலர்க்குங்குறிகள்சொல்லிப்
போற்றுமுன்சிங்கிபோன புதுத்தெருவிதுகண்டாயே.

சிங்கன்-சிங்கியைக்காணமல்-வருந்துதல்

தரு ௩௰ம் முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கேதான்போனளோ-என்சிங்கியிப்போ
எங்கேதான்போனளோ

அநுபல்லவி.

கங்காளர்திரிகூடர்கர்த்தர்திருநாடுதனில் எங்கே

சரணங்கள்.

௧-வேரளகிளிமயக்குவள்-வலியதட்டில்
கேளாமலுமயக்குவள
ஆளாயழகனுமாயாரையெங்கேகண்டாளோ
தோளாசைக்காரிசிங்கிசும்ம கிடக்கமாட்டாள் எங்கே

௨-மெய்க்குறியாலெங்கும்வெல்லுவள்-மனக்குறியுங்
கைக்குறியுங்கண்டுசொல்லுவள்
திக்கிலடங்காதுகுறிபிக்குளடங்காதுமொழி
மைக்குளடங்காதுவிழிகைக்குளடங்காதகள்ளி எங்கே

௩-சித்திரச்சபேசர்மேலே-சிவசமயப்
பத்தியில்லாப்பெயர்போலே
குத்திலாக்குங்கள்ளுங்குடுவையிற்றென்னங்கள்ளும்
அத்தனையுங்குடித்துப்போட்டார்பிறகேதொடர்ந்தாளோ எங்

சிங்கியெதிர்ப்படுதல்.

விருத்தம்.

சீதப்புனற்குற்றாலநாதர் திருநாட்டிலிருவருந்தாங்கண்டபோதே, காதலெனுங்கடலுடைந்துதரிகொள்ளாமற் கைகலக்கும்போது வலைகுறுக்கிட்டாற்போல், வந்துகுறுக்கிட்டேவாணம்பூண்டவின்னுணைச்சிங்கிதனைக்கண்டுசிங்கன், தூதுவந்தநளனுங்கன்னிமாடந் துலங்குதமயந்தியைத்தோன்றினனே.

தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்,

பல்லவி.

இங்கேவாராய்-என்கண்ணே-இங்கேவாராய்

அநுபல்லவி.

இங்கேவாராய்மலர்ச்செங்கைதாராய்மோகச்-சங்கைபாராய்
காமச்-சிங்கியாரேயிப்போ இங்கே

சரணங்கள்.

௧. பாதம்நோமே-நொந்தால்மனம்பேதமாமே
பாதம்நோகநிற்பதேதுபாவமினிகூதலோ கொடிதுகாதலோகடினம்-

௨, பாவிதானே-மதன்கணை-ஏவினனே
காவில்மாக்குயில்கள்கூவிக்கூவியென தாவிசோருதன்னையாவியாவி
கட்ட இங்கே

௩, வருக்கைசூலை-வடவருவித்-திருக்குற்றாலர்
பெருக்கம்பாடிக்கொள்ளமருக்கள்சூடிக்கொள்ளஒருக்காலாடிக்கொ
ள்ள இருக்கால்கூடிக்கொள்ள இங்கே

சிங்கன் சிங்கியைக்கண்டு மகிழ்தல்.

கொச்சகக்கலிப்பா.

தெண்டாடுஞ் சுந்தரற்குத் தோழர்திரிகூடவெற்பிற்
றிண்டாடிநின்றசிங்கன் சீராடுஞ்சிங்கிதனைக்
கண்டாடித்துள்ளாடிக் கள்ளாடுந்தும்பியைப்போற்
கொண்டாடிக்கொண்டாடிக் கூத்தாடிக்கொண்டானே.

சிங்கனுக்கும் சிங்கிக்கும் சம்வாதம்

இராகம்-தன்யாசி-ஆதிதாளம்,

கண்ணிகள்..

சிங்கன்-இத்தனைநாளாகவென்னுடன்சொல்லாமல்
எங்கேநடந்தாயடி சிங்கி — எங்கே

சிங்கி - கொத்தார்குழலார்க்கு விஸ்தாரமாக
குறிசொல்லப்போனேனடா சிங்கா — குறிசொல்

சிங்கன்-பார்க்கிலதிசயந்தோணுது சொல்லப்
பயமாயிருக்குதடி சிங்கி — பயமா

சிங்கி - ஆர்க்குப்பயமினித்தோணின காரியம்
அஞ்சாமற்சொல்லடா சிங்கா — அஞ்சா

சிங்கன்-காலுக்குமேலே பெரியவிரியன்
கடித்துக்கிடப்பானேன் சிங்கி — கடித்து

சிங்கி - சேலத்துநாட்டிற் குறிசொல்லிப்பெற்ற
சிலம்புகிடக்குதடா சிங்கா — சிலம்பு

சிங்கன்-சேலத்தாரிட்டசிலம்பிற்குமேலே
திருகுமுருக்கென்னடி சிங்கி — திருகு

சிங்கி - கோலத்துநாட்டார் முறுக்கிட்டதண்டை
கொடுத்தவரிசையடா சிங்கா — கொடுத்த

சிங்கன்-நீண்டுங்குறுகியுநாங்கூழ்ப்போல
நெளிந்தநெளியென்னடி சிங்கி — நெளிந்

சிங்கி - பாண்டியனார்மகள் வேண்டுங்குறிக்காகப்
பாடகமிட்டதடா சிங்கா — பாடக

சிங்கன்-மாண்டதவளையுன் காலிலேகட்டிய
மார்க்கமேதேதடி சிங்கி — மார்க்கம

சிங்கி - ஆண்டவர்குற்றாலர்சந்நிதிப்பெண்க
ளணிமணிக்கெச்சமடா சிங்கா — அணிமணி

சிங்கன்-சுண்டுவிரல்தோளுங்கொண்டலைப்பூச்சி
சுருண்டுகிடப்பானேன் சிங்கி — சுருண்

சிங்கி - கண்டிமெய்ந்தசத்திற் பண்கொண்பெற்றது
காலாழிபீலியடா சிங்கா — காலாழி

சிங்கன் - மெல்லியபூந்தொடை வாழைக்குருத்தை
விரித்துமடித்தவரா சிங்கி — விரித்து

சிங்கி - செல்வேலியார்தந்த சல்லாபச்சேலை
தெறிபிடித்தேகொடுத்தார் சிங்கா — தெறி

சிங்கன் - ஊருக்குமேற்கே யுயர்ந்தவரசிலே
சாரைப்பாம்பேதடி சிங்கி — சாரைப்

சிங்கி - சீர்பெறறசோழன் குமாரத்தியார்தந்த
செம்பொன்னரைஞாணடா சிங்கா — செம்பொ

சிங்கன் - மார்பிற்குமேலே புடைத்தவிலாந்தியில்
கொப்புளங்கொள்வானேன் சிங்கி — கொப்புள

சிங்கி - பாருக்குள்ளேற்றமாங் காயங்குளத்தார்தந்த
வாரமுத்தாரமடா சிங்கா — பாரமு

சிங்கன் - ஆகாவடமெல்லா மங்கனே கூடவே
ஆவாரைபூத்ததடி சிங்கி — ஆவாரை

சிங்கி - ஏகாவடமென்று சீர்காழியாரெனக்
கிட்டவரிசையடா சிங்கா — கிட்டவரி

சிங்கன் - எட்டிப்பிரவைகுமுறுங்கழுத்திலே
பத்தெட்டுப்பாம்பேதடி சிங்கி — பத்தெ

சிங்கி - குட்டத்துநாட்டாருங் காயங்குளத்தாரும்
இட்டசவளியடா சிங்கா — இட்டசவ

மேற்படி-வேறு.

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

கண்ணிகள்.

சிங்கன் - வள்ளிக்கொடியிலேதுத்திப்பூப்பூர்ப்பானேன் — சிங்கி
சிங்கி - காதில் வங்காளத்தாரிட்ட சிங்காரக்கொப்படா — சிங்கா
சிங்கன் - கள்ளியப்பூபூர்ப்ப ததிசயமல்லவே — சிங்கி
சிங்கி - தெற்கு-வள்ளியூரா றந்தமாணிக்கத்தண்டோடா — சிங்கா
சிங்கன் - வண்ணக்குமிழிலே புன்னையரும்பேது — சிங்கி
சிங்கி - மண்ணில்-துன்னீர்ச்சலாபத்து முத்துமூக்குத்திகாண் சிங்கா
சிங்கன் - சொருகிமுடிக்கதில் தூக்கணமேதடி — சிங்கி
சிங்கி - தென்-குருகையூரார்தந்த குப்பியுந்தொங்கலுந் — சிங்கா
சிங்கன் - விந்தையாமேலெல்லா மின்வெட்டிப்பார்ப்பானேன் — சிங்கி
சிங்கி - இந்தவண்ணப்பணிகளின் மாணிக்கக்கல்லொளி — சிங்கா

சிங்கன்-முலையென்றுசொல்வதை மூடிக்கிடப்பானேன் சிங்கி
சிங்கி - செஞ்சி-விலைமாதர்தந்தது வேடிக்கைக்கச்சடா சிங்கா
சிங்கன்-மூடிக்கிடப்பவும் காற்றங்குலைப்பானேன் சிங்கி
சிங்கி - இது-ஆடித்திருத்தங்கால் வாடைப்பொடியடா சிங்கா
சிங்கன்-அந்தப்பொடியால் முலைவீக்கம்போமோ சிங்கி
சிங்கி - வீக்கம்-ஆனாலுனக்கென்ன போனாலுனக்கென்ன சிங்கா
சிங்கன்-இந்தப்பணியைநீ பூணப்பொறுக்குமோ சிங்கி
சிங்கி-புவி-ஈசர்க்குங்கற்றோர்க்கும் எல்லாம்பொறுக்குங்காண் சிங்கா
சிங்கன்-குல்லத்தைப்பார்த்தால் கொடியிடைதாங்குமோ சிங்கி
சிங்கி - தன்-கொடிக்குச்சுரக்காய் கனத்துக்கிடக்குமோ சிங்கா
சிங்கன்-இல்லர்தசித்தெல்லாம் எங்கேபடித்தாடி சிங்கி
சிங்கி - நாட்டில்-நல்லாரைக்கண்டாருக் கெல்லாம்வருமடா சிங்கா
சிங்கன்-பெட்டகப்பாம்பை பிடித்தாட்டவேண்டாமோ சிங்கி
சிங்கி - இந்த-வெட்டவெளியிலே கோடிப்பாம்பாடுமோ சிங்கா
சிங்கன் கட்டிக்கொண்டேசற்றே முத்தங்கொடுக்கவோ சிங்கி
சிங்கி - நடுப்-பட்டப்பகலில்நா னெட்டுக்கொடுப்பேனோ சிங்கா
சிங்கன்-முட்டப்படாமுலை யானையைமுட்டவோ சிங்கி
சிங்கி - காமம்-மட்டுப்படாவிட்டால் மண்ணோடேமுட்டடா சிங்கா
சிங்கன்-சேலையுடைதன்னைச் சற்றேநெகிழ்க்கவோ சிங்கி
சிங்கி - சும்மா-நாலுபேர்முன்னென்னை நாணங்கெடுக்காதே சிங்கா
சிங்கன்-பாதம்வருடித் துடைகுத்தம்வேண்டாமோ சிங்கி
சிங்கி - மனம்-போதம்வருடிப்போய்ப் பூனையைக்குத்தடா சிங்கா
சிங்கன்-நாக்குத்துடிக்குது நல்வாயிதழுக்கு சிங்கி
சிங்கி - உன்றன்-வாய்க்குள்ளிருப்பது மாலைக்கள்ளல்லவோ சிங்கா
சிங்கன்-ஒக்கப்படுக்கவோ ஒதுக்கிடம்பார்க்கவோ சிங்கி
சிங்கி - பருங்கொக்குப்படுக்கக் குழியிடம்பாரடா சிங்கா
சிங்கன்-விந்தைக்காரியுன்னை வெல்லக்கூடாதடி சிங்கி
சிங்கி - அது-சந்தேகமோவுன் தலைப்பேனைக்கேளடா சிங்கா
சிங்கன்-தென்றேடெல்லாமுன்னைத் தேடித்திரிந்தேனே சிங்கி
சிங்கி - அப்பாவிந்நாட்டில்வந் தென்னையெப்படிநீகண்டாய் சிங்கா
சிங்கன்-நன்னகர்குற்றால நாதரைவேண்டினேன் சிங்கி
சிங்கி - மணிப்-பன்னகம்பூண்டாரைப்பாடிக்கொண்டாடுவோம் சிங்கா
சிங்கன்-பாடிக்கொள்வாரெவ ராடிக்கொள்வாரெவர் சிங்கி
சிங்கி - நீதான் பாடிக்கொண்டாற்போது மாடிக்கொள்வேனடா சிங

நேரிசை வெண்பா.

சுற்றுதலூர்தோறுஞ் சுத்தவேண்டாம்புவியிர்
குற்றாலமென்றொருக்காற் கூறினான்-வற்றா
வடவருவியானே மறுபிறவிச்சேற்றி
னடவருநடானே நமை.

வாழ்த்து-கண்ணிகள்.

௧. கொற்றமதிச்சடையானைக் குறும்பலாவுடையானை
வெற்றிமழுப்படையானை விடையைவாழ்த்துகிறேன்

௨. தாதையில்லாத்திருமகனைத் தடமலைக்குமருமகனை
வேதசங்கவீதியானை வேதியனைவாழ்த்துகிறேன்

௩. தந்திமுதற்கொருகோனைத் தமிழிலஞ்சிமுருகோனை
மைந்தரெனுமிறையோனை மறையோனைவாழ்த்துகிறேன்

௪. தீமுகத்திற்பறிகொடுத்த .திருமுடிக்காயொருமுடியை
மாமனுக்குவரிசையிட்ட மாமனைவாழ்த்துகிறேன்

௫. காமனுக்கும்பூமனுக்குங் கன்னிதெய்வயானைக்கும்
மாமனெனவேபகரும் வளறன்னைவாழ்த்துகிறேன்

௬. நீநிலமெல்லாமளந்த நெடியமாலும்மயனும்
தேடரியதிரிகூடற் செல்வனை யான்வாழ்த்துகிறேன்

௭. சித்ரநதியிடத்தானைத் தேனருவித்தடத்தானைச்
சித்ரசபைநடத்தானைத் திடத்தானைவாழ்த்துகிறேன்

௮. காலவயிரவனைக் காவில்வளர்த்தவனை
மேலைவாசப்பலனை மென்மேலும்வாழ்த்துகிறேன்

௯. கருதுலகமெங்கும்புகழ் கன்னிமார்பெண்களையும்
வரிசைதுரைத்தளவாய் மாமனையும்வாழ்த்துகிறேன்

௰. பணகமணிபூண்டவனைப் பக்தர்களையாண்டவனை
அனவரதத்தாண்டவனை யாண்டவனைவாழ்த்துகிறேன்

இதுவுமது-விருத்தம்.

வார்வாழுந்தனத்திகுழல்வாழ்மொழியம்பிகைவாழி வதுவைப்பூட்டுந்
தார்வாழிதிரிகூடத் தார்வாழிகுறுமுனிவன் றலைநாட்சொன்ன
பேர்வாழியரசர்கள்செங் கோல்வாழிநன்னகரப் பேராலோங்கும்
ஊர்வாழிகுற்றாலத் தவத்தடியர்வாழிநீ டூழிதானே.

திருக்குற்றாலக் குறவஞ்சி
முற்றிற்று.